# சுடர்

CHUDAR

கலை இலக்கியத் திங்கள் இதழ்



த்திகை - 1978

விலை ரூபா 1-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி அலைகள்

## ஒரு மார்பகத்தின் பெறுமதி 20,700 டாலர்கள்!

மேற்கு ஜெர்மனியின் புல்டா எனும் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றத்தில் சுவாரஸ்யமான வழக்கு ஒன்று நடைபெற்று கடந்த 10—11—78ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நடுத்தர வயது குடும்பமாது ஒருவரின் ஆரோக்கியமான மார்பகத்தை அகற்றிய இரு டாக்டர்களுக்கும் 9000 மார்க் (4700 டாலர்களை) மேற்படி பெண்ணுக்கு நஷ்டஈடாக வழங்கும்படி நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

திருமதி கேர்குட்ருட் என்பவரின் வலது மார்பகம் புற்றுநோயால் பீடிக்கப்பட்டிருப்பதாக நினைத்த இரு டாக்டர்களும் தவறுதலாக அம்மார்பகத்தை வெட்டி அகற்றியதற்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இது தவிர இச்சத்திரசிகிச்சை நடைபெற்ற ஹைர்வெல்ட் ஆஸ்பத்திரி வேறு திருமதி கேர்ட்ருட்டிற்கு நஷ்டஈடாக 30 ஆயிரம் மார்க்குகளை (16,000 டாலர்கள்) வழங்குகிறது. (மொத்தமாக 20,700 டாலர்கள் வழங்கப்பட்டுள்ளன.)

இதே ஆஸ்பத்திரியில் முன்பும் இருதடவைகள் பரிசோதனை எதுவுமின்றி இரு பெண்களின் மார்பகங்கள் அகற்றப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மார்பகங்களை எவ்வித முன்யோசனையுமின்றி அகற்றுவதில் இந்த ஆஸ்பத்திரியினர் மிக அவசரமும் தீவிரமும் காட்டியது அசந்தர்ப்பவசமாகும் ஆனாலும் ஒரு மார்பகத்துக்காக இவ்வளவு தொகை டாலர்கள் வழங்கப்பட்டிருப்பதை அறிந்த பல பெண்கள் மேலும் மேலும் அவ்வாஸ்பத்திரிக்கு 'படையெடுத்'துப் போகாமல் இருப்பார்களா என்ன?

## பெண் மாலுமிகளின் கோரிக்கை

பின்லாந்தில் ஹெல்சிங்கி நகரில் அந்நாட்டைச் சேர்ந்த மாலுமிகள் சங்கக் கூட்டம் அண்மையில் நடந்தபோது, அச்சங்கத்தைச் சேர்ந்த பெண் மாலுமிகள் அனைவரும் புதிதாக ஒரு கோரிக்கையை முன்வைத்து மிகக் காரசாரமாக விவாதித்தார்கள்.

தாங்கள் செய்யும் தொழில் காரணமாக அடிக்கடி கருச்சிதைவுகள் செய்து செய்து கொள்வதினால் பல மாதங்கள் வீட்டில் தங்கியிருந்து செலவுகள் செய்வதாகவும் இனிமேல் இச்செலவுகளை தங்களால் பொறுப்பேற்க முடியாதென்றும், கப்பல் நிறுவனங்களே இதற்கான செலவுகளை ஏற்கவேண்டும் என்று அனைத்துப் பெண் மாலுமிகளும் ஏகோபித்து குரலெழுப்பினார்கள். கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டு சமூக சேவை அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கோரிக்கை என்னவோ நியாயமானதுதான்; ஆனால் அடிக்கடி கருச்சிதைவு வேலையில் மாலுமிப் பெண்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தால் கப்பல் கம்பனிகள் அதை எப்படிச் சமாளிக்கப் போகின்றனவோ தெரியவில்லை.

## விமானப்படை வீரரும் மனக்கோளாறும்

நேரம்—அதிகாலை ஐந்து மணி. இடம் கட்டுநாயக்கா விமான நிலையத்தைச் சேர்ந்த விமானப் படைத்தளம். கடமையில் ஈடுபட்டிருந்த விமானப்படை வீரர் ஒருவருக்கு திடீரென எதோ ஒரு 'வெறி' ஏற்பட்டு விட்டது. அவ்வெறியின் காரணமாக துப்பாக்கி முனையில் உள்ள கூரான கத்தியைப் பிடுங்கிக் கொண்டு, பிறிதொரு அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சக வீரர்கள் மீது பாய்ந்து தாக்குதல் நடத்தி அவர்களை குத்திக் குதறி விட்டாராம். அதன் விளைவு மூவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். குத்திக் கிழித்த வீரர் கூட ஆஸ்பத்திரியில்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். எந்த ஆஸ்பத்திரியில் தெரியுமா? அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியில்.

ஏதோ மனக்கோளாறினால்தான் இந்த வேலை அவர் செய்து விட்டாராம். இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி.

படையில் உள்ள மனக்கோளாறுடைய வீரர் ஒருவரினால் சக ஊழியர்களே பாதிக்கப்பட்டு விட்டார்கள். இப்படி 'மனக்கோளாறு' உள்ள வீரர்கள் எத்தனைபேர் வெளியே தெரியாமல் இருக்கிறார்களோ—அது ஆண்டவன் ஒருவனுக்குத்தான் வெளிச்சம். இப்படிப்பட்டவர்களால் பொதுமக்களுக்கும் தொந்தரவு ஏற்படாதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர்
கலை, இலக்கியத்
திங்கள் இதழ்

கார்த்திகை—1978.
சுடர் 4—ஒளி—8.

# 'களையெடுத்தல்' வேண்டும்!

பயிர் வளரவேண்டுமென்றால் களையெடுப்பு அவசியம்.

களையெடுக்காவிட்டால் வயலில் விளைச்சல் பாதிக்கப்பட்டுவிடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளும் களை எடுக்கவேண்டிய கட்டாய கட்டம் வந்துவிட்டது.

ஒரு விடுதலை இயக்கத்துக்கு கட்டுப்பாடு, சாதாரண கட்டுப்பாடு அல்ல, இரும்புக் கட்டுப்பாடு மிக மிக அவசியம்.

கட்டுப்பாடு இல்லாவிட்டால் இயக்கம் கல கலத்துவிடும்.

தமிழினத்தை அழித்தொழித்துவிட நினைக்கும் எதிரிகளுக்கு இந்தக் கட்டுப்பாட்டுக் குலைவு வாய்ப்பாகிவிடும்.

வேதனையென்னவென்றால் கூட்டணியின் தொண்டர்கள் மத்தியில் கட்டுப்பாடு நிறைய இருக்கிறது.

கூட்டணியின் அரசியல் நோக்கு, அரசியல் இராஜதந்திரம், அரசியல் முடிவு இவை பற்றி தொண்டர்கள் மிக ஆழமாகச் சிந்தித்து, மிக தெளிவான முடிவுக்கு வருகிறார்கள்.

அவர்களுக்கு அரசியலும் புரிகிறது, பாதையும் தெரிகிறது.

ஆனால் பேயோட்ட வந்த பூசாரிக்கு பேய் பிடித்தமாதிரி தொண்டர்களுக்கு வழிகாட்ட வந்த தலைவர்கள் சிலருக்கு மட்டும் அரசியலும் புரியுதில்லை; பாதையும் தெரியுதில்லை.

வேளைக்கொரு பேச்சு, நாளைக்கு ஒரு அறிக்கைவிட்டு அரசியல் குட்டையை குழப்புகிறார்கள்.

கூட்டணி வேட்புமனுக்களுக்கு தவம் கிடந்து பெற்று பாராளுமன்ற கதிரைகளைப் பிடிப்பது; அதன் பின் ஏறிய ஏணியை உதைப்பதுபோல் கூட்டணிக்கே, எதிரிகளோடு சேர்ந்து குழிபறிப்பது; அல்லது கூட்டணியைப் பார்த்து மாற்றார் நகைக்கும் அளவுக்கு கோமாளித்தனமாக நடந்து கொள்வது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தலைதூக்கி இருக்கும் இந்தக் கட்டுப்பாட்டுக் குலைவுக்கும்—சந்தர்ப்பவாத அரசியலுக்கும் முற்றுப்புள்ளி அவசர—அவசியமாக வைக்கப்படல் வேண்டும்.

இஃது தயவு தாட்சண்யமற்ற ஒரு தீவிர களையெடுப்பு மூலமே சாத்தியமாகும்.

கட்டுப்பாட்டை மீறுகிறவர்கள்;
தனிவழியே போகிறவர்கள்;
பாதை புரியாதவர்கள்;
பாதை தெரியாதவர்கள்;
பாதை விலகியவர்கள்.

அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய கொம்பர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேடை

முன்னைநாள் தபால் அமைச்சர் குமாரசூரியர் ஆட்சிக் கட்டிலில் இருந்த பொழுது அவரைச் சுற்றி ஒரு கா(க்)கா கூட்டம் இருந்தது. அமைச்சர் பதவி போனதுதான் தெரியும் அந்தக் கா(க்)கா கூட்டம் பறந்துவிட்டது.

சூரியரைப்பற்றி நினைத்ததும் அப்போது வடக்கில் 'கொடிகட்டிப் பறந்த' சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் ஞாபகத்துக்கு வருகிறார்கள். அவர்களது பெயர்கள் சரியாக ஞாபகம் இல்லை. ஆனால் அவர்கள் நடத்திய 'தர்பார்' இலேசில் மறக்கக்கூடியதல்ல.

சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் நடையை கட்டிய பின், அவர்களது இடத்தில் யூ. என். பி. கட்சி அமைப்பாளர்கள் கடையை விரித்திருக்கிறார்கள். இவர்கள்தான் இனி தமிழ் 'தலைவர்'களாக அவர்களது சிங்கள எஜமானர்களால் 'புறமோட்' பண்ணப் படப் போகிறார்களாம்.

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பிரதேசமாக கணிக்கப்பட்டு ஆட்சியாளர்களால் அப்படியே நடத்தப்பட்டு வருவது எல்லோரும் அறிந்த விடயம். இங்கு கடமையாற்றும் சிங்களப் பொலிசார் தங்களை அரசு ஊழியர் என்று ஒருபோதும் நினைப்பதில்லை. ஆளும் இனம் என்ற எண்ணந்தான் அவர்களது தலைக்குஏறியிருக்கிறது. இதனால்தான் அவசர காலத்தில் எதையெதை செய்தார்களோ அவற்றையெல்லாம் 'தார்மீக' ஆட்சியிலும் செய்கிறார்கள். அது சரி, வீடுகளில் நள்ளிரவில் புகுந்து சோதனை செய்வதற்கு சட்டம் ஏதும் இருக்கிறதா?

வட — கிழக்கில் உள்ள (அம்பாரை நீங்கலாக) ஐந்து மாவட்டங்களில் ஒரேயொரு மாவட்டம் தவிர ஏனைய நான்கு மாவட்டங்களிலும் சிங்கள அரசாங்க அதிபர்களே கடந்த பல ஆண்டுகளாக மாறி, மாறி அனுப்பப்படுகிறார்கள். திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த வரையில் கடந்த 20 வருடங்களாக சிங்களவர்களே அரசாங்க அதிபர்களாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். சிங்களக் குடியேற்றத்தை இலகுவாக்கவே இந்த நியமனங்கள் பயன்படுத்தப்படுகிறதென்பது ஒன்றும் இரகசியமான விடயம் அல்ல. பொலிஸ் அத்தியட்சகர்கள் பதவியில் இந்த மாவட்டங்களில் மருந்துக்கும் ஒரு தமிழர் இல்லை.

## நக்கீரன்

மணியன் தனது இலங்கைப் பயணக் கதையை ஒருவாறு முடித்து விட்டார். நான்கு நாட்கள் இரண்டு நண்பர்களோடு இலங்கையை காரில் சுற்றிப் பார்த்துவிட்டு நாற்பது வாரங்கள் கதை 'அளக்க' மணியன் ஒருவரால்தான் முடியும். அவரது கட்டுரையில் காணப்படும் வரலாற்றுக் கொலைகளை மன்னித்து விடலாம். ஆனால் ஊர் பெயர்களை கொலை செய்திருக்கிறாரே அதை எப்படி மன்னிப்பது? உதாரணம்: மட்டக்களப்பு—பட்டிகுலா; கன்னியா—கன்னியாயி. பரவாயில்லை. தவறுகள் இருந்தாலும் இலங்கைத் தமிழர் பற்றி இப்படி நீண்ட ஒரு கட்டுரை எழுதிய முதல் தமிழ் நாட்டு எழுத்தாளர் 'மணியன்'தான்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது பழமொழி. திரு. சத்தியேந்திரா என்ற ஒருவர் அண்மையில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தொழிற்

### கடவுள் தந்த பரிசு

காந்திஜி, தம்மைச் சந்திக்க வந்த சில கல்லூரி மாணவர்களுக்குக் கூறியது:

'நான் பணிந்து நடக்கக்கூடிய கொடுங்கோலன் இவ்வுலகில் ஒருவனே. அவனுக்குப் பெயர் 'மனச்சாட்சி,' கடமைகளுள் முரண்பாடு தோன்றும்போது அந்த விஷயத்தைத் தீர்த்து வைப்பது மனச்சாட்சி ஒன்றே. மனச்சாட்சியின்படியே நடக்க மனிதன் பழகவேண்டும். அதுவும் மிருக உணர்ச்சிக்கு வயப்படாமல் கட்டுப்பாட்டில் பழகியவர்க்கே கைகூடும். மனச்சாட்சியின் சிறு குரலை அடக்க எண்ணினால் அந்தக் கணமே நம் வாழ்வு பயனற்றதாகிவிடும்.

'மாணவப் பருவத்திலேயே இந்த நல்ல பழக்கத்தை நீங்கள் மேற்கொள்ளவேண்டும். இளம் உள்ளத்தில் எந்த பழக்கமும் எளிதில் படியும். அதனால் நீங்கள் உங்கள் மனச்சாட்சியின் குரலைக் கேட்டு, அதன்படி நடக்கப் பழகுங்கள். உங்கள் மனச்சாட்சி உங்களைத் தவறான பாதையில் செல்ல விடாது. மனிதனின் நேர்மைக்கு உதவியாக ஆண்டவன் அளித்த பரிசு இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்
CHUDAR

## மாதம் ஒரு சிறுகதைக்கு பரிசு!

எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக ஒவ்வொரு மாதமும் சிறந்த ஒரு சிறுகதையை தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் திட்டம் ஒன்றினை மார்கழி மாதம் முதல் செயற்படுத்தவிருக்கிறோம்.

சிறந்த சிறுகதை என நாம் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூபா 25 பரிசாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
சுடர்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி
கொழும்பு—12.


சட்டங்கள் பற்றி ஒரு தொடர் கட்டுரை எழுதினார். திரு. ச. ஒரு வழக்கறிஞர், சட்டங்கள் பற்றி கட்டுரை எழுதினால் அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறதென்று கேட்கலாம். உண்மை! ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் விடயம் இத்தோடு முடியவில்லை. தொழிற் சட்டங்களைப்பற்றிய கட்டுரையை அடுத்து 'அரசியல் யாப்பில் தமிழ் மொழிக்கு உரிமை' என்ற தலைப்பில் இன்னொரு கட்டுரை அதே பத்திரிகையில். இந்தக் கட்டுரை வந்து ஒரு வாரம்கூட முடியவில்லை. இன்னொரு செய்தி வந்திருக்கிறது. திரு. ச. அவர்கள் தொழில் அமைச்சுக்கு செயலாளராக நியமனம் பெற்றுவிட்டார். ஒன்றைக் கவனியுங்கள். தொழில் அமைச்சுக்கு செயலாளராகப் போவதற்கு தொழிற் சட்டங்கள் பற்றி கட்டுரை எழுதினால் மட்டும் போதாது. தமிழ் மொழிக்கு புதிய அரசியல் யாப்பில் உரிமை பல இருப்பதாகவும் எழுதவேண்டும். அப்போதுதான் சிங்கள அரசு 'இந்தா பிடி விபீடணா இலங்கை அரசு' என்ற ரீதியில் இப்படியான பதவிகளைக் கொடுக்கும்.

திரு. சத்தியேந்திராவைப் பற்றி எழுதும் பொழுது இன்னொருவரது பெயர் ஞாபகத்துக்கு வருகிறது. அவரது பெயர் மாணிக்கவாசகர். சும்மா மாணிக்கவாசகர் என்று சொன்னால் விளங்காது. முன்னை நாள் நீதியரசர் என்றால்தான் விளங்குமென்று நினைக்கிறேன். வசிப்பிடம் கறுவாக்காடு, கொழும்பிலுள்ள 'தலைப்பாக்கட்டு' தமிழர்களுக்கு தலைவர். இவரும் இப்போது பத்திரிகை அறிக்கைகள் விட்டுக்கொண்டு இருக்கிறார். 'புதிய அரசியல் யாப்புக்கு கூட்டணி பா. உ.க்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துவிட்டார்கள். இது மிச்சம் நல்லது. இனிமேல் இந்த தமிழ் ஈழம் என்ற பேச்சை மூட்டை கட்டி வைத்துவிட்டு, அரசாங்கத்தோடு ஒத்துழைத்து பொருளாதார மேம்பாட்டுக்கு பாடுபட வேண்டும். இதுதான் இவர் பாடுகிற 'கோரஸ்'. பழைய அரசியல் யாப்புக்கு சத்தியப் பிரமாணம் எடுத்த ஜே. ஆர். அதை கிழித்தெறிந்துவிட்டு இப்போது புதிய யாப்பை கொண்டுவந்திருக்கிறார். சத்தியப் பிரமாணத்துக்கு தார்மீக சாமியாரே கொடுத்த மதிப்பு இவ்வளவுதான். நீதியரசர் மெத்த சட்டம் படித்தவர். அவருக்கு இது தெரியாமல் விட நியாயமில்லை. பின் ஏன் இப்படி அறிக்கை விடுகிறார் என்று கேட்டால், அங்கேதான் 'இரகசியம்' இருக்கிறது. சத்தியேந்திரா பாணியில் ஐயாவும் ஏதோ ஒரு வெளிநாட்டு தூதுவர் பதவிக்கு 'அத்திவாரம்' போடுகிறார் என்று ஊகித்தால் அதில் தவறு இருக்க முடியுமா?

இந்த இரண்டு பிரமுகர்களுக்குமட்டுமல்ல, இவர்களைப் போன்றவர்களுக்கும் சொல்லக்கூடியது: 'சற்றே விலகி இரும் பிள்ளாய்!'

யாழ். பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாணவர்களும் 'ருக்கிங்கில்' ஈடுபட்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. இது வருந்தத்தக்கது. இதைவிட வருத்தமான செய்தி இந்த மாணவர்களில் 10 பேர் பெண்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கலை—இலக்கிய விழிப்புணர்ச்சி ஒரு பத்து வருடங்களுக்கு முன் கரைபுரண்டு ஓடியது, கலை விழாக்கள்—நாட்டுக் கூத்துக்கள் வாரம் ஒன்று என்ற கணக்கில் நடந்தேறின. இப்போது மூச்சையே காணோம், கலைஞர்கள் எங்கே போய் ஒளிந்தார்கள்?

தமிழ் நாட்டு மாத—வார ஏட்டு ஆசிரியர்களாக ஒரு குறிப்பிட்ட 'சாதி'யை சேர்ந்தவர்கள் ஆதிக்கம் வகிப்பதைக் காணலாம். கலைமகள், குமுதம், இதயம் பேசுகிறது, ஆனந்தவிகடன், குங்குமம், மஞ்சரி......உதாரணம். இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்களில் பெரும் பாலோர் இந்திய தேசியத்தை புகழ்ந்தும், தமிழ் தேசியத்தை குறைவுபடுத்தியும் எழுதுபவர்கள் கலைமகள் இன்னும் 'ஸ்ரீ'யை விட்டபாடில்லை, தனித்தமிழ் சொல்லான 'திரு' இன்னும் அப்பத்திரிகை ஆசிரியருக்கு கசக்கிறது.

### சிரிப்பு

ராமு: சந்ரா நான் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறேன்......

சந்ரா: அப்படியா... நான் மிகவும் வருந்துகிறேன் நான் ஒருவரை காதலிக்கின்றேன்.

ராமு: அப்படியென்றால் அடுத்த பிறவியில் நீ என்னைத்தான் காதலிக்க வேண்டும்.

சந்ரா: அடுத்த பிறவியில் காதலிக்க உங்களுக்கு முன்பே ஒருவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்.

ராமு: .....................?

—எஸ். கே. எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஒருவன் வரவை நோக்கி...

செல்வி லலிதாப்ரியா



'டியூசன் முடிந்து மாணவர்கள் அந்த ஹாலிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் செல்லும் வரையும் வாசலிலேயே காத்திருந்துவிட்டுத் திரும்ப முயன்ற லாவண்யா, மறுபடியும் 'கேட்' திறக்கும் 'கிறீச்' என்ற ஒலியைக் கேட்டுத் தன் பார்வையை அங்கே ஓடவிட்டாள்.

வலது கையில் சிறிய சூட்கேஸ் ஒன்றுடன் நின்றிருந்தான் ஓர் இளைஞன். அவனுக்கு வயது இருபத்தாறு இருக்கலாம். சிவந்த கட்டுமஸ்தான உடலுடன் கூடிய நெடிய தோற்றம். நெளி நெளியாக வாரிவிடப்பட்டிருந்த தலைமயிர். அளவுக்கு அதிகமாக நீண்டிருந்த 'ஸைட் பர்ன்'

வைத்த கண் வாங்காமல் தன்னையே விழுங்கிவிடுவது போல் உற்று நோக்கியபடி முன்னேறி நடந்து வந்த அவனை இனங் கண்டுகொண்ட வேளையில் அவள் நெற்றி சுருங்கியது. அவன் வரவை அவள் விரும்பவில்லையோ.....? எனினும், பெண்மைக்கே உரிய நளினத்துடன் அவனை வரவேற்பதற்கு அறிகுறியாக உதட்டில் மென்னகையைப் படரவிட்டு, ஹாலைக் கடந்து ஓர் அறையினுள் நுழைந்து மறைந்துவிட்டாள்.

'அடடே! பிரசாத்தா? வாப்பா, வா என்ன இருந்தாற்போல் திடீரென்று...?' — அப்போதுதான் அன்றைய செய்தித் தாள் ஒன்றைப் படிக்கவென்று விரித்த லாவண்யாவின் தந்தை அங்ஙனம் அவனை வரவேற்றார்.

'ஒன்றுமில்லை மாமா. உங்கள் எல்லோரையும் பார்த்துவிட்டு வரும்படி அம்மா அடிக்கடி கூறுவார். எனக்கும் எல்லோரையும் பார்க்கவேண்டும் போல் இருந்தது. அதுதான் ஒரு வார லீவில் வந்து விட்டேன்.'—அவன் அவ்வாறு கூறியது அறையினுள்ளே இருந்த லாவண்யாவின் செவிகளிலும் விழத்தான் செய்தது. அவனது வார்த்தைகளின் பின்னே மறைந்திருந்த உள் கருத்தை அவள் ஏற்கனவே அறிந்து தான் இருந்தாள்.

இரண்டு கிழமைகளுக்கு முன்னால் 'டியூசன்' பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டியிருந்த புத்தகம் ஒன்றை அக்காவின் புத்தகங்களுக்கிடையே தேடி எடுத்துக்கொண்டாள், லாவண்யா. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிய அவளின் மென்விரல்களில் அகப்பட்டது ஓர் கடிதம். பிரசாத்தான் அதை எழுதியிருந்தான். தன்னை அவன் மணக்க விரும்பும் பொருட்டு அக்காவின் துணையை நாடியிருப்பதை அறிந்தும் அறிந்து கொண்ட போது, கடிதத்தை கிழித் தெறிய வேண்டும் போல் அவள் கைகள் பரபரத்தன வாயினும் அக்காவிற்குரிய கடிதம் என்பதால் தன் கைகளுக்குத் தடை போட்டு, அது இருந்த இடத்திலேயே அதனை வைத்து விட்டாள்.

அவன் விடயமாக அக்கா தன்னிடம் எதுவும் கேட்காதது அவளுக்கு வியப்பை அளிக்காது போயினும் அவன் அழகாகக் கடிதத்தை எழுதியிருந்தது, அவளை எல்லையில்லாத ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

கிருஷ்ணமூர்த்தி திருகோணமலைக்கு மாற்றலாகி வருவதற்கு முன் நாவலப்பிட்டியிலுள்ள கச்சேரியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவரது குடும்பம் குடியிருந்த தெருவிற்கு அடுத்த தெருவிலேயே பிரசாத்தின் வீடும் இருந்தது. கிருஷ்ணமூர்த்தியின் ஒரே தங்கைதான் பிரசாத்தின் தாயார்.


லாவண்யாவும், பிரசாத்தும், அங்குள்ள பாடசாலையொன்றில் ஒன்றாகவே கல்வி கற்று வந்த போதும், சக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ மாணவிகளோடு அவன் பண்பில்லாமல் பேசும் வார்த்தைகளும், ஆசிரியர்களையும் மற்றவர்களையும் மதித்து நடக்காத தன்மையும், பாடங்களில் அவன் காட்டிய அசிரத்தையும் அவனிடத்தில் அவள் வெறுப்புக்கொள்ளும்படி செய்திருந்தன.

அவள் இரண்டாவது தடவையாக எஸ். எஸ். ஸி. பரீட்சையை எழுதிமுடித்துவிட்டுத்தான் குடும்பத்தாருடன் திருகோணமலைக்கு வந்து ஏழு வருடங்கள் உருண்டோடிவிட்டன. சுகன்யா ஆசிரியர் தொழிலில் சேர்ந்து அங்குள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றிக்கொண்டிருந்தாள். அண்மையில்தான் அவளுக்குத் திருமணம் முடிந்திருந்தது. அடுத்து கல்யாணத்திற்கு நிற்பவள் லாவண்யா. பிரசாத் புகையிரதப் பகுதியில் ஏதோ ஓர் வேலையில் சேர்ந்து ஒழுங்காக வேலைபார்ப்பதாக அறிந்திருந்த அவளின் தாயார் அவள் முன்னிலையில் அவன் பெயரை தாவது மகள் சம்மதிக்கமாட்டாளா என்ற நப்பாசையுடன்.

பண்புள்ள ஒருவனாக அவன் திருந்தியிருப்பான் என்பதை நம்ப லாவண்யாவின் மனம் மறுத்தது. 'அம்மா, நீங்கள் எதைச் செய்யச் சொன்னாலும் செய்யத் தயாராகவே இருக்கிறேன். ஆனால், இந்த ஒன்றை மாத்திரம் என்னால் நிச்சயமாகச் செய்ய முடியாது! என்னை மன்னித்து விடுங்கள்' அவள் குரலில் அழுத்தம் தோய்ந்திருந்தது.



திருகோணமலைக்கு வந்தாள். அவனோ எட்டாந்தரத்துடன் படிப்பை முறித்துக்கொண்டு ஊர் சுற்றிக்கொண்டிருந்தான். லாவண்யா பரீட்சையில் சித்தியெய்தியிருந்தாலும், மூத்தவள் சுகன்யா பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைக்கு இரண்டு தடவைகள் தோற்றியும் தோல்வியே கண்டதால் இருவரின் படிப்பிற்கும் முற்றுப் புள்ளி வைத்துவிட்டார், தந்தை.

எடுப்பதுண்டு. அப்போதெல்லாம் அவளுக்கு தாயின் மீது கோபம் கோபமாக வரும்.

சென்ற மாதங்கூட நாவலப்பிட்டிக்குச் சுகன்யாவுடன் சென்று திரும்பியிருந்த தாய், 'நீ நினைப்பது போல் இப்போது இல்லையடி அவன். கை நிறையச் சம்பளம் எடுக்கிறான். உனக்கென்னடி குறை வைக்கப் போகின்றான்?' என்று கேட்டு வைத்தாள், அப்போ இப்போதெல்லாம் பிரசாத்தைப் பற்றிய பேச்சை எடுப்பதையே தாய் தவிர்த்து விட்டாள்.

பிரசாத் வந்து ஐந்து நாட்களாகிவிட்டன. ஐந்து வருடங்களின் முன் கண்ட அன்றைய பிரசாத்திற்கும் இன்றைய பிரசாத்திற்கும் இடையே இருந்த மாற்றத்தைக் கண்டு லாவண்யா வியக்கவே செய்தாள். அன்று எப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பார்த்தாலும் இதழ்க் கடையில் பளிச்சிடும் சிகரெட் இன்று அவ்விடத்தில் இல்லை. தனது சகோதரர்களோடு கூடியிருந்து மகிழ்கையில் பேச்சில் அலட்சியமோ, சிரிப்பில் அட்டகாசமோ இல்லாததையும் அவள் காணத் தவறவில்லையாயினும் அவனிடத்தே அவள் கொண்டிருந்த வெறுப்பு அப்படியேதான் இருந்தது.

உடன் பிறந்தவர்கள் பாடசாலைக்குச் சென்றிருக்கும் சமயங்களில் அவனுக்கு வேண்டிய தேவைகளை அவள் கவனிக்க வேண்டியிருக்கும். அப்போதெல்லாம் அவளது வாளிப்பான உடலை அவளறியாமல் உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை கண்கொட்டாமல் பார்ப்பான். எத்தனை தடவைகள் பார்த்தும் தணியாத தாகத்துடன் அவள் அழகை ரசிப்பான். தனியாக இருக்கும் போது அவனது இதயம் அவளைப் பற்றிய கற்பனை உலகில் மிதக்கவாரம்பித்துவிடும்.

அன்று நாவல் ஒன்றை வாசிப்பதில் சுவாரஸ்யமாக ஈடுபட்டிருந்த லாவண்யா, 'அக்கா' என்ற குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தாள். எதிரே அவள் தங்கை ரம்யா நின்றிருந்தாள்.

'அக்கா, உங்களிடம் ஒன்று கேட்பேன்; கோவிக்காமல் பதில் சொல்வீர்களா? எப்படிக் கேட்பதென்று தெரியவில்லை. வந்து... வந்தக்கா... பிரசாத் அத்தானை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? நலல வராகத்தானே இருக்கிறார். ஒரு வேளை யாரையாவது உங்கள் மனம்...' திணறலில் வார்த்தைகள் வெளிவரத் தயங்கின.

'போடி, பைத்தியக்காரி! நான் யாரையுமே விரும்பியிருக்கவில்லை. என்னிடம் ஏன் இப்படியெல்லாம் கேட்கிறாய்?'

'ஒன்றுமில்லை. அத்தான் உங்களை மணந்து கொள்ள விரும்புகிறார். நாளைக்கு ஊர் திரும்ப வேண்டுமாம். போகுமுன் உங்கள் விருப்பத்தை அறிய விரும்புகிறார்.'

'ரம்யா' என்று தன் ஆத்திரத்தை எல்லாம் ஒன்றாகத் திரட்டித் தங்கையை அடக்க முயன்றவள், 'என்னிடம் எதுவும் கேட்காதே; போய் விடு!' என்றாள் ரம்யா போய் விட்டாள்.

அன்று இரவு முழுவதும் லாவண்யாவிற்கு தூக்கமே வரவில்லை. அவள் மனம் மிகவும் குழம்பிக்கிடந்தது. 'இப்படித்தான் வாழவேண்டும்' என்று சில இலட்சியங்களைத் தன் மனதில் வளர்த்திருந்தாள் அவள். தன்னை மணந்துகொள்பவன் படித்தவனாகவும், பண்புள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்ற ஆசை அவளது இதயத்தில் வேரூன்றி இருந்தது. 'இவர் அதிகம் படிக்காதவராக இருந்தாலும் எழுத்தறிவு இருக்கிறது. பண்புள்ளவராகத் திருந்தியிருப்பதாகவும் தெரிகிறது. ஆயினும் இவருக்கு வாழ்க்கைப்பட என் மனம் தயங்குகின்றதே. இவரை மணக்க இஷ்டமில்லை என்று கூறிவிடவேண்டியதுதான். பின் விளைவு...? அப்பா என்னை சினந்துகொள்வார், உன் மனதிற்குப் பிடித்தவன்தான் வேண்டும் என்றால் சீதனத்திற்கு எங்கே போவது? என்பார். சீதனம்! சீதனம்!! சீதனம்!!! கரும்பு தின்னக் கா(ய)ளையர் கேட்கின்ற சீதனத்தைக் கொடுக்க என் தந்தையால் இயலாதுதான். மனதிற்குப் பிடித்தவர் சீதனத்தை எதிர்பாராது வந்தால் அவருக்கு வாழ்க்கைப்படுவது அல்லது, கன்னியாகவே வாழ்ந்து விட்டுப்போவது. என் முடிவால் பெற்றோர்க்குப் பாரமானவளாகவும், தீராத மனவேதனையை அளிப்பவளாகவும் இருந்துவிடுவேனோ?' இவ்வாறான எண்ணம் எனும் அலைகள் அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்தும் எழுந்து எழுந்து உருண்டு மடிந்துகொண்டிருந்தன.

அதிகாலையில் ஒரு முடிவிற்கு வந்தவள், காலையில் மீண்டும் தன்னிடம் வந்த ரம்யாவிடம் அதனைத் தெரிவித்தாள்.

பிரசாத் ஊர் திரும்பி இரண்டு கிழமைகள் ஆகியிருந்தன. மூன்று கடிதங்களை அவன் அவளுக்கு அனுப்பியிருந்தான்.

## வைத்தியரின் திறமை

தென்னிந்திய மாநிலமான கேரளாவில் முன்பு அச்சன் மூஸாத் என்னும் நாட்டு வைத்தியர் ஒருவர் இருந்தார். அவர் மிகச் சிறந்த நாட்டு வைத்தியர் என பெயர் பெற்றிருந்தார். அவரின் திறமைக்கு ஓர் உதாரணம்:

ஒரு பெண்ணுக்கு பிரசவ வேதனை ஏற்பட்டது. இரண்டு நாட்களாகியும் பிரசவம் நடைபெறவில்லை. மிகுந்த வேதனையால் வலியில் துடித்துக் கொண்டிருந்தாள் பெண். வைத்தியர் மூஸாத்துக்கு செய்தி அனுப்பி அவரை வரவழைத்தார்கள்.

அவர் வந்து கர்ப்பிணியின் வயிற்றை ஒரு முறை தடவிப் பார்த்தார். பின் ஒரு ஊசி கொண்டு வரச் சொன்னார். அந்த ஊசியால் பெண்ணின் வயிற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குத்தினார். சில நிமிடங்களில் சுகப் பிரசவம் நடந்து விட்டது.

ஆச்சரியப்பட்டவர்களிடம் வைத்தியர் கூறினார்: "குழந்தையின் கை நச்சுக்கொடியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தது! அதனால்தான் குழந்தை வெளியே வர முடியவில்லை! நான் குத்திய ஊசி குழந்தையின் கையில்போய்ப்பட்டதால் கை நச்சுக்கொடியை விட்டு விட்டது. அதன் பிறகுதான் குழந்தை சுலபமாக வெளியே வந்து விட்டது."

ஆதாரம்: மிரர்.
(நன்றி: மங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவன் ஒரு கட்டழகுக் காளை. மங்கை யொருத்தியைக் காதலித்தான். மணந்து கொண்டான்.

அவன் மனைவியும் அழகானவள்.

திருமணம் முடிந்து தனியே உலாவப் புறப்பட்டார்கள். இருவரும் இன்பக் கதை களை மனம் விட்டுப் பேசிக் கொண்டே நெடுந்தூரம் வந்து விட்டார்கள்.

உச்சி வேளை வந்து விட்டது.

இருவரின் நீள நிழல், தரையில் இருவரின் காலடியில் ஓரடியாகக் குறுகிவிட்ட நேரம்.

பெண்ணுக்குத் தாகம் எடுத்தது. நடை தளர்ந்தது.

நின்று விட்டாள், தலைக்கு மேல் மாங் கனிகள் கொத்துக் கொத்தாய்த் தொங்கிக் கொண்டிருந்தன.

"கண்ணே! ஏன் நின்று விட்டாய்?"

"நா வரண்டு விட்டது. தாகம்" என சாடை காட்டினாள்.

மேலே பார்த்தான். பழுத்த மாங்கனி கள்... தாகம் தீர்க்குமே! ஆனாலும் உயரத்தில் இருந்தன.

"பெண்ணே! உன் தாகம் தீர வழியுண்டு. கீழே குனிந்து நிற்பேன். முதுகில் ஏறிப் பறித் துக்கொள்."

புத்திசாலிப் பெண்! "எட்டாது" எனக் கூறிவிட்டாள், தரையில் நின்றபடி.

"சரி, என் தோளில் நின்று பறி; கனி எட்டும்..."—காதற்கணவன்.

"ஒரு நிபந்தனை?"

"என்ன?"

"நான் தோளில் ஏறி மாங்கனி பறித்து தரையில் இறங்கும்வரை கண்களை மூடிக் கொள்ளவேண்டும்."

காதற்கணவன் தலையசைத்துத் தரையில் உட்கார்ந்தான். கண்களை மூடியிருந்தபடியே எழுந்து நின்றான்.

காதல் மனைவி தோளில் ஏறிக் கையை உயர்த்தினாள், கனி பறிக்க.

அரைக் கண்களுடன் காதலன் மேல் நோக்கினான்!

"மாங்கனி வேண்டாம்! வாருங்கள்!...' என்று கூறித் தரையில் குதித்து விட்டாள்!

வெட்கம் தாளாமல் காதல் மனைவி தரை யில் குதிக்கக்காரணம்? வெகு பழங்காலப் பெண். புடவையை கச்சம் கட்டியிருந்தாலும், மேலாக்கு, மார்க்கச்சையின்றி இருந்தாள். இரு கைகளையும் மேலே தூக்கும் போது அவள் மேனியழகைக் காதற்கணவன் பகலில் பார்த்து விட்டதுதான்!

இக் கதையை ஒரு கூட்டத்தில் சொன்ன வர்: கி. வா. ஜ.

தகவல்: திருமதி க. திலகராணி—கிரான்.

---

அவைகளுக்கு அவனால் ஏனோ பதில் எழுத முடியவில்லை. அனுதாபம் காரணமாக ஒரு வனை அடையவிரும்பி, அதுவும் முடியாமல் தவிக்கின்ற ஓர் பெண்ணின் உள்ளம் உண்மை யில் விசித்திரமானதுதான். நான்காவது கடிதமும் கிடைத்த வேளையில், அவனது இலட்சியக் கோட்டையின் அத்திவாரக் கல்லே ஆட்டம் கண்டது. அழகிய எழுத்துக் களுக்குப் பதிலாக 'கோணல் மாண' லான எழுத்துக்கள் தான் அதில் காணப்பட்டன.

அந்தக் கடிதத்தைத் தாயி டம் நீட்டியவள், 'நண்பனைக் கொண்டு கடிதம் எழுதும் அளவிற்கு எனக்குத் தகுதி யில்லாத ஒருவனுக்கு நான் வாழ்க்கைப்படத்தான் வேண் டுமா? சொல்லுங்கள், அம்மா!' என்று படபடத்தாள்.

அங்கு வந்த அவளின் தந்தை நிலைமையைப் புரிந்து கொண்டவராக, 'பிரசாத்தை மணந்துகொள்ள விருப்ப மில்லாவிட்டால் விட்டுவிடு. எதற்கும் அவசரப்படாமல் ஒரு முடிவிற்கு வா.' எனக் கூறிச்சென்றார். 'படிப்பில்லை என்பதற்காக அவனை ஒதுக் காதே.' என்று அவர் கூறாமல் கூறியது அவள் அறிவிற்கு எட்டாமல் போகவில்லை.

மகளின் நிலைக்காக தாயின் மனம் இரங்கியதென்றாலும் சொந்தத்தை ஒதுக்கவும் அவ ளால் முடியவில்லை. பல அறி வுரைகள் கூறி மகளைத் தன் வழிக்குக் கொண்டு வர முயன் றாள். அவளது முயற்சி வீண் போகவில்லை. இரண்டு நாட் களாக அடம்பிடித்த லாவண்யா மூன்றாம் நாள் அடங்கிப் போனாள்.

மாதம் ஒன்று கடந்திருக் கும்.

நாவலப்பிட்டியில் இருந்த அந்தரங்கமான தோழி ஒருத்தி யின் மூலம் பிரசாத்தின் நடத் தையை அறிந்து கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சுடர்" வட்டம்

'சுடர்' வாசகர்கள், ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு கலை, இலக்கிய பரிமாற்றங்களை நடத்தி பயன் பெறுவதற்கு வசதியாக "சுடர் வட்டம்" எனும் பகுதியை ஆரம்பித்திருக்கிறோம்.

இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகொள்ள விரும்புவோர், தங்கள் முகவரி பொழுது போக்கு விபரங்களை எழுதி, கீழ்க்காணப்படும் முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்புக

**'சுடர்' வட்டம்**
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு—12.

சந்தர்ப்பம் லாவண்யாவிற்கு வாய்த்தது. தனது இலட்சியக் கனவுகள் ஒவ்வொன்றும் படிப்படியாகக் கலைந்து போவதை அவள் உணர்ந்தாள்.

லாவண்யாவின் உள்ளம் இப்போது பாறையாக இறுகிக் கிடந்தது. அவளிடமிருந்து கடிதம் வருவது நின்று விட்டதால் அவளை நாடி அவனே வந்தான். எதிர்பார்த்திருந்த அந்தத் தனிமையும் அவனுக்குக் கிடைத்தது.

அவளருகே வந்தவன், 'நான் வந்தது முதல் பார்க்கிறேன்; உன் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை. நான் போட்ட கடிதங்களுக்குக்கூட உன்னிடமிருந்து பதில் இல்லையே; ஏன்'? என்றான்.

அவள் கண்கள் அனலாயின. 'உங்கள் நடிப்பில் இன்னமும் நான் ஏமாந்து கொண்டே இருப்பேன் என்று எதிர்பார்த்தீர்களோ? உங்கள் அன்பில் போலித்தனமில்லை என்று நினைத்திருந்தேன். ஆனால், நீங்கள் மற்றுமோர் பெண்ணையும் விரும்பி அவளோடு உறவாடியிருக்கின்றீர்கள். அந்த உறவை விரும்பாத அவள் பெற்றோர் அவளை வேறு ஓர் இடத்தில் மணமுடித்து வைத்ததும், எங்கே முறைப் பெண்ணும் கிடைக்காமல் போய் விடுவாளோ என்று இவளை நாடி வந்துவிட்டீர்கள்; இல்லையா?'

அவன் அதிர்ச்சியடைந்தான். இந்த விடயம் அவளுக்குத் தெரியாமலேயே இருந்துவிடும் என்று அவன் நினைத்தானோ என்னவோ. 'அது முடிந்து போனகதை. காதலில் தோல்வி கண்டவன் வேறு பெண்ணை மணந்துகொள்ளக் கூடாதோ?' என்றான்.

'தாராளமாகச் செய்துகொள்ளலாம். ஆனால், ஒரே நேரத்தில் இரு பெண்களைக் காதலித்த உங்களை எப்படி நம்பலாம்?'

'நீ எனக்கு கிடைப்பாய் என்ற நம்பிக்கை அப்போது எனக்கு இருக்கவில்லை.' என்றான் அவன்.

'அப்போது உண்டாகாத நம்பிக்கை இப்போது மாத்திரம் எப்படி உண்டாக முடியும்? குடிப்பழக்கத்தை விட்டுவிட்டதாகக் கூறினீர்களே; அது எவ்வளவு தூரத்திற்கு உண்மை? நேர்மையும், பண்பும் இல்லாதவரும், குடிகாரருமான ஒருவருக்கு இவள் வாழ்க்கைப் படமாட்டாள்'—அவள் குரலில் உறுதி இருந்தது.

'லாவண்யா உனது முடிவில் மாற்றமில்லாது போகுமேயானால் எனக்கு நீ எழுதிய இரண்டு கடிதங்களையும் கொண்டே உன்னை வேறொருவனும் மணந்துகொள்ள முன்வராமல் தடுக்க முடியும்!'—சினத்தினால் சிவப்பேறியிருந்த அவன் கண்களை உற்று நோக்கினாள் அவள், அவன் இதயத்தையே ஆழம் பார்ப்பது போல 'நான் அவைகளைக் 'கண்ணுபின்னு' வென்று எழுதவில்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எனக்கென்று ஓர் வாழ்வை கடவுள் நிச்சயம் அமைத்துத்தான் இருப்பான். நடந்தவைகளை அறியப்படுத்தி, அதைப் பொருட்படுத்தாத நல்லவர் ஒருவர் என்னை ஏற்றுக்கொள்ள வரும் வரையும் இவள் அவருக்காகக் காத்திருப்பாள்!'—கண்களில் நம்பிக்கை ஒளி வீசக் கூறியவள் தந்தை வருவதைக் கண்டு 'விருட்' என்று தன் அறைக்குத் திரும்பினாள்.

பிரசாத் ஊருக்குப் போய் விட்டான். அவன் போன சிறிது நேரத்தின் பின் லாவண்யாவிடம் வந்த கிருஷ்ணமூர்த்தி அவளை எரித்து விடுவது போலப் பார்த்தார். 'குடிப்பழக்கம் உள்ள எவனாலும் அதனை உடனடியாக நிறுத்திவிட முடியாது உனக்காக எவ்வளவோ குறைத்து விட்டான். உன் அன்பால் அவனை முற்றாகத் திருத்திவிட முடியும்.'

தந்தையின் கோபம் அவளுக்கு அச்சத்தைக் கொடுத்ததாயினும், 'அந்த நம்பிக்கை எனக்கில்லை, அப்பா!' என்றாள்.

'உனக்கிருக்கிறதோ இல்லையோ, இந்தக் கல்யாணம் நடந்தேயாகும்.'— இதுவரை அவர் மனதில் அடக்கி வைக்

## இளமை எங்கே?

கூனிக் குறுகிப் போன ஒரு கிழவி தரையைப் பார்த்தபடியே தெருவில் நடந்துகொண்டிருந்தாள். அவள் கூனைப் பழிப்பதற்காக ஓர் இளைஞன் அவளைப் பார்த்து. "பாட்டி! தரையைப் பார்த்துக் கொண்டே நடக்கிறாயே! என்ன தேடுகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அந்தக் கிழவி, "இழந்துவிட்ட என் இளமையைத் தேடுகிறேன்" என்று சொன்னாள்.

—ஒரு வடமொழி சுலோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கப்பட்டிருந்த கோவம் எரிமலையாக வெடிக்கவே, அவள் கன்னத்தில் அடிகள் பலமாக விழுந்தன. கால்கள் அவள் நெஞ்சையும் வயிற்றையும் பதம் பார்த்தன. கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த தாய் அலறிப்புடைத்துக் கொண்டு அவ்விடத்திற்கு வருவதற்குள் அடிப்பதை நிறுத்தியிருந்தார் அவர்.

தலையணையில் முகம் புதைந்துக் குப்புறப் படுத்துக்கிடத்தாள், லாவண்யா. அவளது நீல நயனங்களிலிருந்து பெருகிய நீர் முத்துக்கள் தலையணையைத் தெப்பமாக நனைத்துக் கொண்டிருந்தன. அவள் மனம் வேதனையில் மூழ்கிக் கிடந்தது.

ஒரு பெண் தன் தந்தையிடம் தனக்கேற்ற நல்லதோர் கணவனைத்தான் கேட்க முடியும் அதை அவரால் கொடுக்க முடியாது போவதைக் காட்டிலும் அவள் விருப்பத்திற்கு விரோதமாக—தனது சௌகரியத்திற்காக—அவளால் வெறுக்கப்படுகின்ற ஒருவனுக்கு வாழ்க்கைப்படத்தான் வேண்டுமென்று அவளை பலாத்காரப்படுத்துவது எவ்வளவு கொடியது?

தனது கேசத்தை யாரோ வருடுவது போன்ற உணர்வு வரப்பெற்றவளாய் தலையை நிமிர்த்திப்பார்த்தாள். பெற்றவள் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். அவள் மடியில் தலையை வைத்துக் 'கோ'வென்று கதறி அழுதாள். அவளது மூக்கிலும், கன்னங்களிலும் இரத்தம் கசிந்து காய்ந்திருந்தது. அழுதழுது நீள் விழிகள் சிவந்து போயிருந்தன. முகம் வீங்கியிருந்தது. அந்தக் கோலத்தைக் கண்டு, அவளை அந்நிலைக்குக் கொண்டுவர, தானும் ஓர் காரணமாக இருந்ததை யெண்ணி பெற்றவள் மனம் பதறித் துடித்தது கணவனின் முன் பாசப் பிரவாகத்தைக் கட்டுப்படுத்த இயலாது—'உங்களுக்கென்ன, பைத்தியமா பிடித்துவிட்டது? அவளை இப்படிப்போட்டு அடித்திருக்கிறீர்களே! தங்கையின் மகன் பெரிதாக போய்விட்டானோ? மகளைக் காட்டிலும் சொந்தம் பெரிதில்லை. நீங்கள் பல வருடங்கள் குடிகாரராக இருந்து நான் பட்ட வேதனை என் மகளுக்கு வரவேண்டாம். நல்ல இடத்தில் அவளைக் கொடுக்க முடியாது போனால் கன்னியாகவே என்னோடு வாழட்டும்' என்று ஆத்திரத்தோடு கணவனை நோக்கிக் கூறினாள்.

தனது எண்ணத்திற்கு உடந்தையாக இருந்தவள் இப்போது விரோதமாக நடக்க முற்பட்டதும் கிருஷ்ணமூர்த்தி செயலிழந்து போனார். மனைவியின் எதிர்ப்பைச் சமாளிக்க அவரால் நிச்சயம் முடியாது. தான் செய்யவிருந்த தவறை அவரது மனமே இடித்துக் கூறியதோ என்னவோ, நாளடைவில் அவர் பிடிவாதம் தளர்ந்து போயிற்று.

இருள் மயமான வாழ்க்கையில் தள்ளப்படவிருந்த தன்னைக் காப்பாற்றிய அன்னையின்பால் லாவண்யாவிற்கு நன்றி சுரந்தது. அவளது வாழ்வு எனும் ஏட்டில் புரட்டப்பட்டு விட்ட அத்தியாயங்களில் தன் வாழ்க்கையை செப்பனிடுதற்காகப் போராடிய உரிமைப் போராட்ட அத்தியாயம் மறக்க முடியாத ஓர் உணர்ச்சிமிகுந்த அத்தியாயந்தான்.

அடுத்த அத்தியாயம் விரிந்து கிடக்கிறது.

சீதனம் என்று எதையும் எதிர்பாராது தன்னை மனமுவந்து ஏற்க பண்பும், அறிவும், நிரம்பப் பெற்ற ஒருவன் வருவான் என்ற நம்பிக்கையோடு அந்த ஒருவன் வரவைத் தேடி அவள் காத்திருக்கின்றாள்!

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலை இசைகோக்கும் மாமணிக்கை எங்கும்
அழகை வணங்குங்கை கற்ருேர் அவையை
அடங்க அமர்த்துங்கை ஆசிரிய ராக
அடங்கிப் பணிசெய்த அம்புயக் கை.

# குரும்பசிட்டி மண்ணளைந்த காவியக் கை

பண்டிதர்: க. சச்சிதானந்தன்

நில்லாக் கரமும் நிறுத்தாத மென்பதமும்
சொல்லோவா நாமலரும் தூங்கினவோ—எல்லாரும்
தேவ அரம்பையர்கள் சேர்த்தெடுத்த செங்கரமாம்
பூவணையில் நீதுயின்ற போது.

கவியமுதாள் கன்னித் தமிழமுதாள் தேடும்
சுவைநூல்கள் கண்ணீர் துளிர்க்க—சபையரங்கும்
தாங்காது விம்மியதே தண்ணுர் நினதுவிழி
நீங்காத நித்திரையின் போது.

இறவாக் கிழவியரும், எழிலோவாப் பள்ளியரும்
திறவாப் படலைகளும் சுப்பர்களும், தேவியரும்
காவடியும் கள்ளில் களித்திருக்கும் பொன்னரும்
பூவடியாள் பொன்னியும் புகழ்பேசும் நல்லானும்
சேதித் தெருவெல்லாம் சிரித்து விளையாடிப்
பூரித் திருக்க புகழ்செய்து சாகாத
காவியத்து மன்னராய்க் கதைசெய்து நாடகத்தில்
ஓவியங்கள் தீட்டி உருவாக்கும் செந்தளிர்க்கை.

★

ஈழத்தி லக்கியங்கள் எண்ணி எழுத்தெழுத்தாய்
ஆழப் படித்து அவற்றின் சுவையெல்லாம்
மாத விதழ்களிலும் மன்றத்தார் ஏட்டினிலும்
சேதி யிதழ்களிலும் திசைபோய்ப் பரவியிட
இரவு பகலுழுத இன்தளிர்க்கை தென்னட்டின்
வருவிருந்து பார்த்தவரை வாவென் றழைப்பதற்கு
நீட்டும் மணிக்கரங்கள் நேசத்தால் அன்புமடல்
தீட்டும் திருக்கை சிந்திக்கும் செங்கை.

★★

தொடங்கும் எழுத் தாளரைத் தூக்குங்கை பொய்யோர்
அடங்க எழுதுங்கை அல்லும் பகலுமாய்
ஏட்டைப் பிரிக்குங்கை இனிய உயிர்நாடிப்
பாட்டை விரிக்குங்கை பாலருக்குச் சொன்மலரால்
பக்கத் திருந்து பலபேசி என்மனத்தில்
துக்கம் பறக்கச் சுருட்டளிக்கும் தூமணிக்கை
நேரம் தெரியாமல் நெஞ்சு கலப்பதற்கு
வாரின் கடியாரம் கட்டாத மாமலர்க்கை
பழுத்த கவிதேடிப் பண்ணெழுதி யான்பாரா
எழுத்துக் குவியல் கிளறும்கை இன்கவிகள்
ஒட்டுங்கை பேசினல் ஊறும் சுவையமுது
கொட்டுங்கை தேனுகச் சொட்டுங்கை கோமணிக்கை.

★

நாவலர்க்குப் பின்னே நமதீழ ஓங்குபுகழ்க்
காவல் செயவென்றும் கன்னித் தமிழ்மகட்கு
ஆரங்கள் செய்யவும் ஆயிரமாய் நூல்படைத்துப்
பாரங்கள் செய்யவும் பாவென்னும் கன்னியவள்
நாணமல் மேடைக்கு நடந்து வருவதற்கும்
புலவோரை மக்களுக்குக் காட்டுதற்கும்
பரமா னந்தர்தம் பள்ளிப் பரந்தமணல்
திரையா யிருந்து நிமிர்ந்தொருவர் பாராது

ஆனுச் சழித்த அருந்தவக்கை விசிதமிழ்க்
காஞர் குரும்பசிட்டி மண்ணளைந்த காவியக்கை
நாகம்மை பூமலர்க்கை நாடிப்பிடித்தகை
பாகம் பிரியாமல் பாரம் சுமந்தகரம்
சன்மார்க்க மேடையினில் தவமலர்க்கை
முன்சார் வயிரவரைக் கூப்பி முகிழ்க்குங்கை
வானிற் புலவோர்கள் வாவென் றெழுந்துபற்றி
மானமணிப் பீடம் மலர்தூவி ஏற்றினரே.

(இரசிகமணி நினைவு மஞ்சரியிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தபிரான் ஏன் ஓடுகின்றார்

— முருகு —



1977ஆம் ஆண்டு ஆவணி மாதம் காலை நேரம்.

பழைமையும் பெருமையும் சரித்திரப் புகழும் மிக்க அநுராதபுரம் நகரில் தங்கவேலியிடப்பட்டுப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற வெள்ளரசு மரத்தின் நிழலில் புத்த— பிரான்—நிர்மலன்—அமர்ந்திருக்கின்றார்!

ஊனக் கண்ணுடைய மானிடருக்கு அவர் அமர்ந்திருப்பது தெரியவே தெரியாது!

புத்தரின் அருவத் திருமேனி ஞானக் கண்ணினருக்கு மாத்திரமே தெற்றெனத் தெரியும்!

எனவே "கண்டபாவனையில் கழுதை மயிர் பிடுக்கித் தீர்த்தமாடிய" கதையைப் போல, அவர் சுற்றி வருகின்றார் என்று மற்றவரும், மற்றவரைப் பார்த்து அடுத்தவருமாக இப்படியாகப் பலரும் சுற்றி வந்து ஏதோ தத்தம் அறிவுக் கெட்டிய வரையில் தத்தம் ஆசைகளை முணுமுணுத்து வெள்ளரசு மரத்தை வணங்குகின்றனர்.

அருவத் திருமேனியுடன் அமர்ந்திருக்கும் போதிசத்துவரும் இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் பரிதாபமுற்றாராயினும் மௌனமாக அமர்ந்திருக்கின்றார்.

தாம் எழுந்தருளியிருக்கும் அரசமரத்தைச் சுற்றி — வருகின்ற இரு பெண்களின் உரையாடலைக் கேட்ட புத்தர் நாட்டு நடப்பை — மக்களின் ஆன்ம ஈடேற்றம் எந்த நிலையில்— என்பதை அறியும் ஆவலுடன் இன்னும் சற்றே கூர்ந்து கவனிக்கின்றார்.

"என்னடீ குசுமா! தாலி போட்டிருக்கிறாய்? நீயும் தமிழ்ப் பெண்ணாகிவிட்டாயோடீ?"

"இல்லை மெனிக்கே! இராத்திரி என்ரை புருஷன் பெரியதொரு வேட்டைக்குப் போயிருந்தார். வேட்டையாடியவற்றுள் இதுவுமொன்று."

"என்னடீ வேட்டை, குசுமா? எங்கேடீ?"— மெனிக்கேக்கு வியப்புத் தாங்க முடியவில்லை!

"எங்கடை அநுராதபுரம் புகைவண்டி நிலையத்திலைதான்; இது தெரியாதா உனக்கு, மெனிக்கே?"

"குசுமா சற்றே விளக்கமாகச் சொல்லேன்"—கெஞ்சுகின்றாள் மெனிக்கா!

"இராத்திரி யாழ்ப்பாணத்திலிருந்து வந்த மெயில் ரயிலை அநுராதபுரம் புகைவண்டி நிலயத்தில் நிறுத்தி எங்கடை ஆட்கள் கொள்ளை அடித்தார்கள், அதில் வந்த தமிழ்ப் பெண்களின் நகைகள் உடைகள் மற்றும் உடைமைகள் எல்லாம் பறித்தெடுத்தார்கள். தமிழாக்களுக்கும் நல்ல "சாப்பாடு"! எத்தனை பேர் இறந்தார்களோ?....." எனப் பெருமை தொனிக்கும் குரலில் கூறியவாறே மெனிக்காவுடன் கூப்பிய கரங்களுடன் குசுமா தொலைவில் நடந்து கொண்டிருந்ததால் புத்தருக்கு மிகுதிக் கதை கேட்கவுமில்லை; அவர்களின் கதை கேட்கக் கூடிய தொன்றாகவுமில்லை. எனினும் ஞானமூர்த்தியாம் புத்தர் "அநுராபுரம் புகைவண்டி நிலயம் வரை போய்ப் பார்த்து வருவோமே" எனத் திருவுளம் கொண்டவராக மெதுவாக எழுந்து நடந்தார்!

சரித்திரப் பெருமைமிக்க அந்த நகரின் தார் வீதியில்

## அஞ்சலி!

கட்டுநாயக்காவுக்கு சமீபத்தில் நடைபெற்ற கோர விமான விபத்துக்கு இலக்காகி தமது உற்றார், உறவினர், கணவன், மனைவி குழந்தைகளை இழந்து பரிதவித்துநிற்கும் ஹஜ்ஜாஜிகளின் துயரத்தில் பங்கு கொள்வதோடு விபத்தில் உயிர் நீத்த ஹஜ்ஜாஜிகளுக்காகவும் மிக வேதனையுடன் சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர்மணி போனாரே

தேன் சுவறும் பாஉதிரும் செந்தமிழ்வாய்
மூடியதோ? தென்றல் காற்றைப்
போன்றதுபோல் ஆற்று பொருள் தேங்குமுரை
போயிற்றோ? புலவருள்ளே
தோன்று சுடர் மாமணியாய்த் துலங்கியவர்
தமிழணங்கின் சொந்தச்செல்வர்
மீண்டும் வரமாட்டாத இடம் சென்றாரே!
ஈது விதியோ அம்மா!

★

தெளிவு நிறை ஆராய்ச்சிப் புலனறிவு
சீர்எளிமைத் தோற்ற மென்றும்
களிவழியும் முகம் காண்பார் காந்தத்தின்
முன் இரும்பாய்க் கவரப்பட்டார்
பழிபேதுமில் லாவார்த்தை பகருமெம
தரும் பெரிய தம்பிப்பிள்ளை
விழிகளிரண்டினைத் திறந்து தமிழர் முகம்
பார்க்காரோ? விந்தை அம்மா!

★

பற்றளவில்லா திருந்தும் சமூக சம
யப்பரப்பில் படர்ந்து நின்ற
புற்றரையாம் சாதி இன பேதங்கள்
போய் ஒழியச் சீர்திருத்தம்
உற்றசமுதாய அமைப் பொன்றுருவா
தல்காண உழைத்த செம்மல்
சுற்ற மெலாம் விம்மியழச் சொல்லாமல்
கொள்ளாமல் சென்றிட்டாரே!

★

கீதையிலே ஆழ்ந்த உள்ளம் கிழக்கிழம்
பெற்றதிரு உடலம் தாங்கி
வேதசித்த அந்த நுட்பம் மெருகுறவே
விளக்கவல வித்வம் ஏந்தும்
மூதறிஞர் என்று தமிழ் உலகமெலாம்
வியந்தேத்தி அவைமுன் வைத்த
சாதகனும் புலவர் திரு தம்பிப்பிள்ளை
இன்றேன் சயனித்தானே!

★

எண்ணமெலாம் கவிதை யெனும் இணையில்லா
அமுதத்தை இசைந்தாலே
வண்ணமிகு பாமலரால் தமிழ்வனிதை
மனம் குளிர மாலை சூட்டி
விண்ணளவு புகழுடனே விளங்கிவிபு
லானந்தன் ஆசி பெற்றோன்
கண்ணபரமாத் மாவின் கழலிணையைச்
சேர்தற்கோ காலம் சென்றார்;

சிறிது தூரம் நடந்து சென்ற போதுதான், தமக்கு எதிர்ப் பக்கத்திலிருந்து நாற்பது ஐம்பது பேர்கள் கொண்ட ஒரு கூட்டத்தினர் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு வருவதனையும் ஒரு மஞ்சள் அங்கி அணிந்த ஒருவர் அக் கூட்டத்தின் முன்னணியில் தலைமை தாங்கி நடந்து வருவதனையும் கண்ட புத்தர் சற்றே பாதையோரத்தில் ஒதுங்கி நின்று கூட்டத்தினரையும் அவர்களின் பல தரப்பட்ட தமிழின எதிர்ப்பு ஓலங்களையும் கூர்ந்து கவனித்தார்!

ஆனால் அஞ்ஞான இருளில் நின்ற அந்த துறவிக்கும் அக் கூட்டத்தினருக்கும் அருவத் திருமேனியினரான புத்த பிரானை எவ்வாறு தெரியும்? எனவேபுத்தர் திடீரென முதிய மானிட உருவெடுத்து வெறி பிடித்த துறவியின் அருகே சென்று "சுவாமியே! எங்கே இவர்களையும் அழைத்துக் கொண்டு செல்லுகிறீர்கள்?" என வினவினார்.

"தமிழர்கள் வடக்கே உள்ள எம்மவர்களையெல்லாம் கொன்று குவிக்கின்றார்களாம். எம்மவர்களின் உடல்களை மரக் கிளைகளில் கட்டித் தொங்க விட்டுள்ளார்கள். எங்கள் குலப் பெண்களின் மார்பகங்களை வாள் கொண்டு அறுத்து எரியும் நெருப்பிலிடுகின்றார்களாம். 'எனவே இந்த நகரில் உள்ள தமிழரின் கடைகள்' வீடுகள் எல்லாவற்றினையும் அடித்து நொருக்கித் தரை மட்டமாக்கப் போகின்றோம். பழிக்குப்பழி வாங்கப் போகின்றோம். நீங்களும் வாருங்கள்", என அவசரம் அவசரமாக விளக்கமளித்த அந்தத் துறவி -புத்தருக்கு-இவரே புத்தரென அறியாத அந்த துறவி, ஒரு அவசர அழைப்பினையும் விடுத்தார்.

"சுவாமி! ஆத்திரக்காரனுக்குப் புத்திமத்திமம். தமிழர்கள் நீங்கள் கூறுவது போலக் கொடுமையான சித்தம் படைத்தவர்களல்லர். இரக்க சிந்தையுள்ளவர்கள். நீதி நியாய மறிந்தவர்கள் தமிழர்கள்! எனவே நீங்கள் அறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றினை நன்கு ஆராய்ந்து பகுத்து அறிந்தபின் நீங்கள் செயலாற்றுவதே உத்தமமானதாகும்". எனப் புத்தர் அவருக்கும் அறிவுரை கூறினாராயினும், துறவியும் கூட்டத்தினரும் கேளாக்காதினராகப் "பழிக்குப்பழி; இரத்தத்துக்கு இரத்தம்" எனக் கூவியவாறே தம்பாதையில் முன்னேறிச் சென்றனர்.

"இவர்கள் 1958 லும் வதந்திகளையெல்லாம் உண்மையென நம்பிப் பெரும் பழி பாவங்களைத் தேடிக்கொண்டார்கள். இப்போதும் மீண்டும் அதே பிழையைச் செய்து தீராப் பழிபாவங்களைச் செய்து கொள்ளப்போகின்றார்களோ" என இரங்கியவராகத் தமது முதிய மானிட உருவத்துடனேயே வீதியில் நடந்தார்.

சற்றுத் தூரம்தன் நடந்து சென்றிருப்பார், புத்தர். ஒரு பெண் கலைந்த கூந்தல் காற்றில் அலைபாயத் தூரத்தில் தம்மை நோக்கி ஓடி வருவதனைக் கண்டு கொண்டார், புத்தர்.

தமக்கும் ஓடிவரும் இளம் பெண்ணுக்குமிடையே இடைவெளி குறையக்குறைய அப்பெண்ணின் கையில் மூன்று மாதம் மதிக்கக் கூடிய சிசு ஒன்றினையும் தன் மார்புடன் இறுக அணைத்தபடியே தனது உயிரைக் கையில் பிடித்தபடி தலைதெறிக்கும் படியாக ஓடி வருவதனைப் புத்தர் கண்டார்.

அவளைத் துரத்திக் கொண்டு அவளின் பின்னால் ஒருபெரும் கூட்டமே "அவளைப் பிடி; அடி; கொல்" என்று கூக்குரலிட்டபடியே ஓடிவருவதனையும் புத்தர் கண்டார்.

தம்மைக் கடந்து செல்லவிருந்த பெண்ணைப் பார்த்து புத்தர் "பெண்ணே நில்; ஏன் ஓடுகின்றாய்?" என்று தமக்கேயுரிய கருணைமிகு மொழியில் வினவினார்!

ஓடிக் களைத்த பெண் புத்தர் முன் நின்று மேல்-மூச்சு கீழ் மூச்சு வாங்க மிரள மிரள விழித்தபடியே "அவர்கள் என்னையும் என் குலக் கொழுந்தையும் கொல்லத் துரத்திக் கொண்டு ஓடிவருகிறார்கள். என்னையும் என் குலக் கொடியையும் காப்பாற்றுங்கள். பெரியவரே!" என புத்தரை இரந்து நின்றாள்.

அவளுக்கு முதியவராக நின்ற புத்தர் பதில் தருவதற்கிடையே அவளைத் துரத்தி வந்த வெறியர் கூட்டம் அவளையும் புத்தரையும் சூழ்ந்து கொண்டது.

வெறியர்களில் நால்வர் அந்தப் பெண்ணைப் பற்றி இழுத்தனர், அவளின் கருங்கூந்தலில் பிடித்து இழுத்துக் கீழே வீழ்த்தினர்.

மிருகங்களிலும் கீழான நிலையில் நின்றிருந்ததால் அவர்கள் அந்தப் பெண்ணை மாறி மாறி... சீச்சீ....! சூழ நின்றோர்கள் வெறிபிடித்த நரிகளாயினர்.

புத்தர் கண்களை மூடிக் கொண்டார்.

அந்தப்பெண்ணும் கண்ணை மூடி விண்ணை அடைந்தாள்.

பெண்ணின் கையிலிருந்து நழுவி வீழ்ந்த குழந்தையினைப் புத்தர் எடுத்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டார்.

வெறியன் ஒருவன் "அந்தச் சனியனைத் தா கிழவா" என்று கர்ச்சித்தான்.

"அது சிறு குழந்தை. வஞ்சனை அறியாதது; அதனைவிட்டு விடுங்கள்" என்றார் முதியவராம் புத்தர்.

"அதனை விடுவதா? இன்றைய விதை; நாளைய விருட்சம், இதனை விட்டால் இது நாளை வளர்ந்து சிங்கள மக்களைக் கொன்று குவிக்குமே. தா கிழவா" என்று கூறி அந்தப் பச்சைப் பாலகனைத் தந்திரமாகப் புத்தர் எதிர்பாராத நேரம் பார்த்து புத்தரின் கைகளிலிருந்து தட்டிப் பறித்துத் துடிதுடிக்க வெட்டிப் போட்டான் வேறொரு வெறியன்.

# இறைவன் விளையாட்டு

''அழியாத செந்தமிழிற் கவிதையாத்தோன்
அற்புதமாய் கதையினைப் பாடல்செய்தோன்

தெளிவான நடையோடு உரை பகர்ந்தோன்
தெள்ளுதமிழ் சுவையதனிற் திளைத்து நின்றோன்

அழியாத புகழ்பெற்று விட்ட வெங்கள்
அரும்புலவன் பெரியதம்பிப் பிள்ளை என்ற

ஒளிஞாயி றெம்மைவிட்டு மறைந்த தந்தோ?
உயர்தமிழ்க் கவிப்பெண்ணாள் உள்ளம் சோர்ந்தாள்.

இருக்கின்றான் ஒருபுலவன் எமக்குள் என்று
இறுமாந்து இருந்தோம்நாம் ஐயோ வெங்கள்

செருக்கான நினைவுகளைச் சிதிலம் ஆகச்
செய்தானே கொடுங்காலன்; சிந்தை அள்ள

விருப்போடு கவியாத்த வாயும் மூடி
விழிமூடித் தமிழ்பார்க்க விருப்பம் இன்றி

இருக்கின்ற இந்நிலைதான் என்ன விந்தை?
இறைவன்றன் விளையாட்டோ இந்த விந்தை?

—விக்னேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓகோ இதுதான் உங்கள் வீரமோ? மாவீரன் எல்லாளனையும் உங்கள் துட்டகைமுனு இப்படியாகவேதான் வஞ்சனையாகக் கொன்று வென்றிருப்பான்" என முணு முணுத்துக் கொண்டார் முதியவர்-


இதனைக் கேட்டுத்தானோ என்னவோ இன்னொரு வெறியன் "நீ தமிழன்கள் ஒளிந்திருக்குமிடத்தைக் காட்டிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களைப் பாதுகாக்கவோ பார்க்கின்றாய்?" என்று கூறியவாறே கிழவராக நின்ற புத்தரை எட்டித் தனது காலால் உதைத்துத் தனது கையில் இருந்த ஒரு கத்தியால் புத்தரின் கையினை வெட்டினான், ஏனெனில், புத்தர் பிள்ளைக்காகப் பரிந்து பேசியது அவர்களுக்கு அத்தனை தூரத்துக்குக் கோபத்தினை ஏற்படுத்திவிட்டது!

அதிர்ஷ்டவசமாக அவனின் கத்தி வெட்டுத் தட்டுப்பட்டுப் போகவே சிறிய காயத்துடன் புத்தர் தப்பித்துக் கொண்டார். மீண்டும் அந்த வெறியன் தாக்க முனைந்த போது இன்னொருவன் அவனைத் தடுத்து விட்டான். வெறியர்களின் கூட்டத்திலிருந்து ஒருவாறு தப்பித்துக் கொண்ட புத்தர், தமது கத்தி வெட்டுக் காயத்துக்கு மருந்து இட்டுக் கொள்ளவென அநுராதபுரத்தில் உள்ள அரசினர் வைத்திய சாலையை நோக்கித் தமது பயணத்தை முடுக்கி விட்டார்.

தமது பாதையில் அவர் கண்களைத் திறந்து பார்க்கவே இல்லை. ஏனெனில் புத்தர் தமது போதனைகள் யாவற்றிற்கும் வழியெங்கணும் புதைகுழிகள் சுடுகாடுகள் அமைக்கப்பட்டதனைத் தமது கண்ணூரக் கண்டு கொண்டதனாலேயே!

இவற்றினைக் கண்ட புத்தரின் கருணை நெஞ்சம் கனலாய்க் கனன்றது; மெழுகாய் உருகியது; இரத்தத்தைக் கொட்டியது.

இப்போது, புத்தருக்குத்தான் ஏன் இந்த மானிட வடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சுடர்’ சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆறு திங்கள்கள் | — | 6-00 |
| ஒரு ஆண்டு | — | 12-00 |
| இரு ஆண்டுகள் | — | 24-00 |

(தபாற் செலவு உட்பட)

சுடரின் சந்தாதாரர்களாக விரும்புவோர் அதற்கான தொகையை காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளை மூலம் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

நிர்வாகி,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

ஒவ்வொரு மாதமும் ‘சுடர்’ வாசகர் கரங்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்.

வத்தை எடுத்து இந்த ஆராய்ச்சியில் இறங்கினோம் என்று வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

எனினும் இந்த வடிவத்தோடேயே தொடர்ந்துஉலவி நாட்டு நடப்பை அறிய வேண்டும் என்ற ஆசை அவர் நெஞ்சில் தலைதூக்கியது.

எனவே ஒருவாறு அரசினர் வைத்தியசாலைக்குள் நுழைந்த புத்தருக்கு, தாம் நுழைந்தது ஒரு அரசினர் வைத்தியசாலைக்குள்ளேதானா அல்லது போர்க்களத்திற்குள்ளேதானா என்ற சந்தேகம் அவருடைய நெஞ்சத்தில் விசுவரூப மெடுக்கவே திகைத்து நின்றார்.

அங்கே—

பெயர்களால் தமிழ் நோயாளர்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர்!

நோய் தீர்க்கும் தமிழ் வைத்திய நிபுணர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தார்கள்.

கலகத்தில் காய முற்றோர் சிலர் காலனுடன் போராடிக் கொண்டிருந்ததால் எழுந்த முனகல் ஒலி ஆங்காங்கே இடைக்கிடை ஒலித்துக் கொண்டிருந்தது.

காலனுடன் போராடும் காயக் காரர்களுக்குத் துணை நிற்க மறுத்து மாற்றினத்து டாக்டர்களும் உதவியாளர்களும் வைத்திய சாலையை விட்டே போயிருந்தார்கள்!

இவற்றையெல்லாம் கண்ட போது, தமக்கு வெறியனால் ஏற்பட்ட காயம் மிகமிகச் சிறிய தொன்றாகவே—இல்லை—இல்லை—தமக்கு ஏற்பட்ட ஒரு காயமாகவே கருதமுடியவில்லை, புத்தரால்!

இப்போது புத்தருக்கு அவமானமும் ஆத்திரமும் கவலையும் சேர்ந்து மும்முனைத் தாக்குதலைத் தொடங்கி இருந்தன.

தமது போதனைகளும், அறிவுரைகளும் தமக்கு முன்னாலேயே அவமதிக்கப்படுவதனை--சிதைக்கப்படுவதனை—சிரழிக்கப்படுவதனை--கண்டு புத்தரின் மனம் சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தது!

வானளாவக் கட்டி எழுப்பப்பட்டிருந்த விகாரைகள் யாவும் தமது போதனைகளுக்கும் அறிவுரைகளுக்கும் கட்டப்பட்ட கல்லறைகள் என்றே கருதத்தலைப்பட்டார், புத்தர்!

வைத்தியசாலைக்குள் இருந்து வெளியேறினாலே போதும் என்று எண்ணியவராகப் புத்தர் அங்கிருந்து வெளியேறித் தமது பயணத்தை புகைவண்டி நிலையம் இருந்த திசையை நோக்கித் திருப்பிவிட்டார்.

புத்தருக்கு “அநுராத புரம்” இப்போது “அநியாய புரம்” ஆக தெரிந்தது.

எனவே அநியாயபுரத்திலிருந்து வெளியேறி விடவே புத்தருக்கு மனத்துள் “வெறி” ஏற்பட்டிருந்தது.

மேலும், இங்கேயே இத்தனை ஊழிக் கூத்தென்றால் மற்ற நகரங்களில் தம்மை வழிபடுபவர்கள் என்ன கோரத் தாண்டவங்களை ஆடி இருக்கின்றார்கள் என—என்ன என்ன சங்காரங்களை செய்துள்ளார்கள் என-அறிந்து கொள்ளவும் புத்தர் பெரிதும் விருப்புக் கொண்டிருந்தார்! இல்லைத்—துடித்துக் கொண்டிருந்தார்.

புகை வண்டி நிலையம் மற்றொரு போர்க்களமாகக் காட்சியளித்தது புத்தருக்கு!

ஏதோ ஒரு மேடையில் நின்ற புகைவண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார் புத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெறித்த முத்துக்கள்

அண்ணாவின் அரசியல் வாழ்விலே பல்வேறுபட்ட கட்டங்களிலும் காலத்தால் சாகாத வார்த்தைகளை அண்ணா சிந்திய துண்டு. அவ்வித்தகனின் நாவிலிருந்து தெறித்த முத்துக்கள் சிலவற்றை இங்கு காண்போமா?

**"கண்ணீர்த் துளிகளே!**
**என் கண்ணின் மணிகளே!"**

பெரியார் ஈ. வே. ரா-வின் திராவிடக்-கழகத்திலிருந்து 'கண்ணீர்த் துளியுடன் வெளியேறுகிறோம்' என அண்ணாவின் தலைமையிலான தம்பிகள் வெளியேறிய பொழுது, பெரியார் அண்ணாவையும் தம்பியரையும் 'கண்ணீர்த் துளிகள்' என நிந்தித்தார். தி. மு. க. வைத் தொடக்கிய அண்ணா அதன் முதற் கூட்டத்திலேயே பெரியாரின் நிந்தனையை பல்லவியாகக் கொண்டு தன் தம்பியரை விழித்தார். 'கண்ணீர்த் துளிகளே! என் கண்ணின் மணிகளே!' என்று தன் தலைமையுரையைத் தொடக்கினார்.

**'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'**

இவை தம் தம்பியருக்கு அண்ணா வழங்கிய தாரக மந்திரம். இன்று தி. மு. க. வை இணைத்து வைத்திருப்பவை இம்மூல மந்திரங்களே, இவை 'கடமை, ஆணை, இறைமை, வண்மை' எனத் தத்துவ ஞானி "ஆஸ்டின்" வகுத்த தத்துவங்களை நினைவூட்டுகின்றன.

**'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'**

அரசியல் எதிரிகளால் கல்லடியும் வாயடியும் பட்டு உள்ளமும், சில சமயங்களில் உடலும் புண்பட்டுப் போன தம்பியருக்கு அண்ணா போட்ட ஒத்தடம்

**'மறப்போம்—மன்னிப்போம்'**

'சென்றேன், கண்டேன், வென்றேன்' என்ற சீசரின் வரலாற்று பெருமைமிக்க வார்த்தைச் சிக்கனத்துடன் அண்ணா கூறிய இவ்வார்த்தைகள், வெற்றி கொண்ட தன் தம்பியர் விரோதிகளைப் பழிவாங்கத் தலைப்பட்ட போது கூறியவையாகும். இவ்வார்த்தைகள் அண்ணாவின் விரிந்த உள்ளத்தால் மட்டுமல்ல வார்த்தைகளைத் தெரிந்தெடுத்த உத்தியையும் காட்டுவன.

**'நான் சாமானியன்'**

தான் தொட்ட துறை அத்தனையையும் துலக்கி, தானும் துருவ நட்சத்திரமாகத் துலங்கிய அண்ணா, தன் எளிமையும் தன்னடக்கமும் இழையோட என்றுமே இவ்வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டார். 'சாமானியன் சாமானியன்' எனக் கூறிக் கொண்டே பாரிய ஓர் அரசையே கைப்பற்றிய அதிசய மனிதர் அண்ணா ஒருவரே. தமிழ் நாட்டின் முதன் மந்திரியாக பதவியேற்றுக்கொண்ட பின்னரும் தான் 'சாமானியன்' என நிறுவத் துடித்த விசித்திர மனிதரும் அவரே

அண்ணாவின் குறிப் பேட்டில் இருந்து

தொகுத்தவர்:
நவிண்டிலூர் ந. புவி

# சிறையும் இறப்பும் வளர்க்கும் கொள்கை

ஏழுந்தமிழ் இதயன்

சிறைக்குள் இறுக்கி விட்டார்—என்னைச்
சிறைவாசம் செல்லுமென்றார்
அறைக்குள் போட்டுவிட்டால்—என்
சிந்தனையும் மாறிடுமா?

*

எடுஎடு பிடியுமென்று—என்னைச்
சிறையினில் விட்டுவிட்டால்
அடிப்படைக் கொள்கைவிட்டு—நான்
சுரண்டலைத் தொட்டிடுவேனோ?

*

வாழ்நாள் எல்லாமுங்கள்—பாசாங்கு
வார்த்தையை நம்பிநாங்கள்
கோழை களாய்ப்போனோம்—இன்னும்
கோழையா இல்லைநாங்கள்

*

சிறைக்குள் இருப்பதனால்—என்றன்
தோழர்களைப் பார்த்திடலாம்
மறைக்க முடியாது—மக்கள்
இருக்குமிடம் என்இடமே

*

சிறையை விட்டகற்றி—என்னைப்
'போகம்பர' ஏற்றிடலாம்
குறையல்ல அதுஎங்கள்—கொள்கை
நிறைவாக்கும் பாதைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐ. கார்த்திகேசன், 137/8, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், உதைபந்தாட்டம் விளையாடுதல், கதைப் புத்தகம் வாசித்தல்.

நா. இரத்தினதாஸ், இல. 15 ஆறுவது லேன், நெலும்புர ரோட், இரத்மலானை.

பொழுதுபோக்கு: கதைப் புத்தகம் வாசித்தல், சினிமா பார்த்தல், வானொலி மேடை கலை நிகழ்ச்சிகள் ரசித்தல்.

சி. ரவீந்திரன், 38, முகாந்திரம் வீதி, கொழும்பு—12.

பொழுதுபோக்கு: இலக்கிய நூல்கள் படிப்பது, நாவல் சஞ்சிகைகள் வாசிப்பது.

காரை திலகர், சுப்பிரமணியம் வீதி, இடைப்பிட்டி, காரைநகர்.

பொழுதுபோக்கு: பத்திரிகை, சஞ்சிகை, நாவல் வாசித்தல், கதை, கட்டுரை, எழுதல்.

ஆ. இரா. இராசமாணிக்கம், செயலாளர்,மலையகப்பொதுப் பணி மன்றம், மே/பா இரா. நீலமேகன், கூட்டுறவு பாற்சாலை ஆவா — எலியா, நுவரெலியா.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரைகள் எழுதுதல், நாடகங்கள் தயாரித்தல், தமிழ்ப் பணி, சமூகசீர்திருத்தங்களில் ஈடுபடுதல்.

க. விக்னேஸ்வரன், பருத்தித்துறை வீதி, அம்பன், குடத்தனை.

பொழுதுபோக்கு: கட்டுரை, கதை, கவிதை எழுதுதல், இலக்கிய நண்பர்களுடன் தொடர்பு.

கவிஞர் முத்துமாதவன், கறுவாக்கேணி, வாழைச்சேனை.

பொழுதுபோக்கு: கவிதை, கட்டுரை எழுதல், நாடகங்களில் நடித்தல், அரசியற் தலைவர்கள் சரித்திரம், தத்துவப் புத்தகங்கள் படித்தல்.

சிற். ஸ்ரீ ஜீவா, கேணியடி கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

பொழுதுபோக்கு:சமூகசேவை, நாவல் வாசித்தல், விளையாட்டு, வானொலி.

பே. நீக்கிலாஸ், சீரியம் தோட்டம், சில்லாலை, பண்டத்தரிப்பு.

பொழுதுபோக்கு: சுதந்திரன், சுடர், படித்தல், இலக்கிய நூல்கள், நாவல்கள் படித்தல், கிரிக்கெட் விளையாட்டு.

யா. வரதராசன், மே/பா சம்பந்தர் சரணாலயம், 779, விநாயகபுரம், துணுக்காய்.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரை எழுதல், முத்திரை சேகரித்தல்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், மருதனுமடம், சுன்னாகம்.

பொழுதுபோக்கு: சிறுகதை, கட்டுரை, நாடகம் எழுதுவது.

ஈழகணேஷ், "கலை முன்னேற்றக்கழகம்" இல, 126, மத்திய வீதி, கொழும்பு—12.

பொழுதுபோக்கு கதை, கவிதை, கட்டுரை, நாடகம், இலக்கியபரிமாற்றம்.

க. சுந்தரலிங்கம், இல, 20 யூனிட் 2, வவுனிக்குளம்.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரை, கவிதை வாசித்தல், எழுதுதல், வானொலி கேட்டல்.

எஸ். சிவபாலன், பிரதான வீதி, ஆறுமுகத்தான்குடியிருப்பு, தன்னாமுனை, செங்கலடி.

பொழுதுபோக்கு:சஞ்சிகைகள், சிறுகதை, வானொலி, தமிழ் அரசியற் கருத்தரங்குகள், நண்பர் தொடர்பு.

கிங்ஸ்லி ஞானப்பிரகாசம்(16) தபாற்கந்தோர் பங்களா, பண்டாரவளை.

பொழுதுபோக்கு: புத்தகம் வாசித்தல், சினிமா, விளையாட்டு, அரசியல் கருத்து பரிமாறல்.

த. இராசரெட்னம், குவாறி ஒழுங்கை, கல்முனை—2.

பொழுதுபோக்கு: ஓய்வுநேரங்களில் கதை,கட்டுரை, எழுதுதல்—தமிழீழ அரசியல் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்ளல்.

வே. பரசுராமன், துறை நீலாவணை-8, கல்முனை.

பொழுதுபோக்கு: கலை, இலக்கிய ஈடுபாடு, பொதுப்பணி, தமிழீழ கொள்கை விளக்கம் பரப்புதல், வானொலித் தொடர்பு.

செல்வி க. கனேஸ்வரி, இல.4 இராமகிருஷ்ண நந்தவனம், வெள்ளவத்தை, கொழும்பு—6

பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு இலக்கிய பரிமாற்றம், நாவல்கள், கவிதைகள் வாசித்தல்.

ஆ. கிறிஸ்துராஜா பிரான்சிஸ், "இசையகம்" திருமலை வீதி, வாகரை.

பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், பத்திரிகை, சஞ்சிகைகள் வாசித்தல் அவைகட்கு சிறுவிடயங்கள் எழுதுதல் நாடகங்களில் பங்குபற்றுதல்.

இரா. உதயணன், 30/3, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.

பொழுதுபோக்கு: அரசியல் விவாதம், ஜோக்ஸ், தமிழ் ஈழம்பற்றி கலந்துரையாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் தேடும் பக்த கோடிகள்



சீர்மாறன்

இங்கிருந்து பார்த்தால் முன்னுலுள்ள முதலியார் சந்திய நாதன் வீடு — அப்படியே தெரியும்! முன்னல் ஒரு பூந்தோட்டம்! அதைத் தொடர்ந்து — முந்திரிகைத் தோட்டம்! வீட்டின் இடது புறமாக இரண்டொரு மாமரங்கள்-பலாமரங்கள்! தொடர்ந்து மாட்டுத் தொழுவம்! அதன் பின்னல் கிணற்றடி

இதெல்லாம் தெளிவாக தெரியுமோ என்னவோ - நாள் தோறும் - வேலைக்காரச் சிறுமி — கோகிலா — ஓலமிடும் சத்தமும் கதறியமும், சத்தமும் கேட்கும்! அதைத் தொடர்ந்து முதலியார் அம்மாவின் - இரைச்சல் கேட்கும்! கிழமையில் ஒரு நாளாவது—முதலியார் வேஷ்டியை வரிஞ்சு கட்டிண்டு — அவளை மரத்தோடு கட்டி வைத்து அடிக்கிற காட்சி — அதோ அந்த பலா மரத்தில் தான் கட்டுவார் — அப்படியே தெரியும்!

முதலியார் ஊரில் ரொம்ப பேர்போனவர்! ஏன் முற்போக்கானவரும் கூட! அவருக்கிருக்கிற பரம்பரைச் சொத்தின் பண வலிமைக்கும்—அந்த சமுதாயத்தில் பரம்பரையாக அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட கௌரவத்திற்கும் —அந்தஸ்திற்கும்—அங்கு இன்னும் அவருக்கு இலைவைக்காத குறை!

அவருடைய உருவத்தைப் பார்த்தாலே— ஒரு 'பெரியவர்' தான்! பரந்த நெற்றியும் — அதில் எந்த நேரமும் விபூதியும், சந்தனமும் பரந்த மார்பும் — அதில் பல ஆண்டுகள் செல்வச் செழிப்போடு வாழ்ந்திருக்கிருர். — என்ற தசைப் பிடிப்புக்களும் — மடிப்புகளும் -எந்த நேரமும்—சிவந்த—தாய்மையாக விருக்கும் பாதங்களும்!

அந்த ஊரில் — கலை விழாவோ — திருவிழாவோ — திறப்பு விழாவோ நடைபெறுல் நிச்சயம் அந்த ஊர் பெரிய மனிதர் என்ற கோதாவில் — அவருக்கும் ஒரு அழைப்புஇருக்கும்! இப்படியான விழாக்களில் அவர் கலந்து கொள்கிருர் என்றலே — அந்த வைபவம் ஒரு தனிச் சிறப்புப் பெறும்! அவருடைய பேச்சையும்—முற்போக்கு கருத்துக்களையும் கேட்க — தனியொரு கூட்டம் (அது அவருக்கு மட்டுமேயுரிய கூட்டம்) வரும்!

இத்தனைக்கும் அவர் ஒரு சமாதான நீதவானும் கூட! கோகிலாவுக்கு — எட்டு ஒன்பது வயதிருக்கும்போதே (பதினன்கு வயதுக்கு குறைந்தோரை வேலைக்கு வைத்திருக்கக் கூடாதென்று சட்டமிருக்காமே! உஷ்! மெதுவாக! பெரிய இடத்து விவகாரம்!—பணமும் பதவியுமிருந்தால்தான் சட்டமே அவர்கள் காலடியிலிருக்குமே!

அவளுக்கு இப்போ—பன்னிரண்டு வயதாவது இருக்கும்! அவள் ஒரு அனுதை போலும்! அல்லது யாராவது ஏழைப் பெற்றேரிடமிருந்து — பணம் கொடுத்து வாங்கியிருப்பார் போலும். ஏனு, இந்த நான்கு வருடத்தில் அவளை யாருமே தேடி வந்ததாக இல்லை! அவளும் எங்காவது போனதாகத் தெரியவில்லை!

காலையில் - எழுந்து அடுப்பு பற்றவைப்பது முதல் — வீடு கூட்டி — முற்றம் கூட்டி - ஆடு மாடுகளை அவிழ்த்து கட்டவே நேரம் பத்து மணியாகிவிடும். அப்புறம்தான் காலைச் சாப்பாடு! தொடர்ந்து-சந்தைக்குப் போகவேண்டும். சமையலுக்கு உதவ வேண்டும் — பிள்ளைகளை குளிப்பாட்டி — துணிகளும்

## நன்றி

எமது வேண்டுகோளுக்கிணங்க சுடருக்கு சிறுகதைகள், கவிதைகள் கட்டுரைகள் மற்றும் பல விடயதானங்களை அனுப்பி உதவிய எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும், எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

அநேக இளம் எழுத்தாளர்களும் பல ஆக்கங்களை அனுப்பி தங்கள் திறமையை வெளிப்படுத்தியிருந்தார்கள். தரமான படைப்புகள் அவ்வப்போது சுடரில் பிரசுரமாகும் என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்தும் ஆக்கங்களை அனுப்பி உதவும் படி வேண்டுகிருேம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
'சுடர்'
194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைக்க — நேரம் எப்படியும் இரண்டுக்கு மேலாகி விடும்! இரவிலும் வேலைகள் எல்லாம் முடிந்து — சாப்பாடு — படுக்கைக்குப் போக — பத்து மணியாகாமலிருக்காது!

அவளுக்கும் இது பழகி விட்டது!

வேலைக்காரி என்றாலே இப்படித்தானே என்ன?

அன்று ஊர்க்கோவில் திருவிழா! அதுவும் முதலியார் — வருடாவருடம்—செய்யும் திருவிழா! நேற்று மாலையிலிருந்தே — வீட்டில் ஒரே ஆரவாரம் — கல கலப்பு உறவினர்கள் தேடி வருவதும்—தெரிந்தவர்கள் கூடி வருவதும்! கோகிலா தான் பாவம் வழமையான வேலை போல் ஆயிரம்மடங்கு வேலை! ஓடிஞ்சே போயிட்டாள்!

பலர் வாழும் ஒரு வீட்டில்—அங்கு வேலைக்கும் யாருமிருந்தால்·ஒரு ஊசிகூட காணாமல் போனால்—அந்த வேலையாளை குற்றவாளியாக்குவது தானே நியாயம்! அப்படி இயலாதவளை—குற்றம் சுமத்துவதன் மூலம்தான்—தங்கள் குற்றங்களை—குறைகளை — மறைத்துக் கொள்கிறார்கள்!

ஆனால், கோகிலா அப்படியானவள் அல்ல! அவளுக்கு



வீட்டில் மகாராணிபோல் இருக்கவா-சம்பளம் கொடுத்து வைச்சிருக்கார் முதலியார்?

ஆனால்—இவ்வளவு வேலைகள் செய்தும்—தினமும் திட்டும், அடியும், உதையும் வாங்குவதுதான் அவளுக்கு பொறுக்க முடியவில்லை!

வேலைக்காரியென்றாலே — இப்படியொரு இயற்கையான நிபந்தனையும்—இருக்கோ?

மறு நாள் காலையில் வீட்டில் திடீர் ஆர்ப்பாட்டம்!

"முதலியாரின் ஒருவயது—பேரப்—பிள்ளையின் மோதிரத்தைக் காணவில்லையாம்!" அரைப் பவுணிலும் சற்றுக் குறைவான பெறுமதியாகும்! எல்லாருமே இடி விழுந்தது போல்ஸ் தம்பித்துப் போய் நிற்கிறார்கள் (பணக்காரனுக்கல்லவா தெரியும் பணத்தின் அருமை.)

அப்படியொரு ஆசையோ தேவையோ—இதுவரை ஏற்பட்டதில்லை! ஏற்படப்போவதுமில்லை வேலைக்காரியாக இருந்தால் என்ன? அவள் இன்னும் ஒரு குழந்தைதான்!

ஆனால் இதெல்லாம் அவர்களுக்குப் புரியுமா என்ன?

முதலியார் இப்போ இரைஞ்சின்டு—வீடே இடியற மாதிரி கத்துகிறார்! அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரை வரவழைக்கும் கங்காருவின் தாய்ப்பாசம்



பல வருடங்களுக்கு முன் அவுஸ்ரேலியாவில் கடும் வரட்சி ஏற்பட்டது. பல மாதங்கள் மழையின்மையால் குளம், குட்டைகள் எல்லாம் வற்றிவிட்டன. அதனுல் காடுகளில் உள்ள வனவிலங்குகள் எல்லாம் நீரைத் தேடி நகரங்களுக்கு படையெடுக்க ஆரம்பித்தன.

வரட்சி காரணமாக நகர மக்களுக்கும் அவர்களின் வீட்டு மிருகங்களுக்குமே போதிய நீர் வசதியில்லாதிருந்தது. இந்நிலையில் வனவிலங்குகளின் படையெடுப்பை எப்படி சமாளிப்பது?

பல வீடுகளில் நீர்த் தொட்டிகள் வீட்டிற்கு வெளியில் தோட்டத்தில் அமைந்திருந்தன. அதனுல் இரவு வேளைகளில் இதனைப் பாதுகாப்பது நகர மக்களுக்கு பெரும் தலைவலி ஆகிவிட்டது. இரவு முழுவதும் ஒருவர் மாறி ஒருவர் துப்பாக்கியும் கையுமாக தண்ணீர்த் தொட்டிகளை பாதுகாத்து வந்தனர்

ஒரு நாள், நகரின் வெளிப்புறத்தில் ஒரு தோட்ட வீட்டில் தனியே வசித்துவந்த ஒருவர் மாலை மங்கும் வேளையில் தொலைவில் ஒரு மரத்தின் மறைவிலிருந்து ஏதோ ஒரு மிருகம் தன் வீட்டைக் கண்காணிப்பதைக் கண்டார். உள்ளே சென்ற அவர் துப்பாக்கியும் கையுமாக திரும்பி ஒளிந்து கொண்டு அந்த மிருகத்தைக் கவனித்தார். சிறிது நேரத்தின் பின் அந்த மிருகம் தயங்கித் தயங்கிக் கொண்டே மறைவிலிருந்து வெளிவந்து அவர் வீட்டை நோக்கி வர ஆரம்பித்தது. வீட்டுக்காரரும் மிருகம் நெருங்கியவுடன் துப்பாக்கியால் அதைச் சுட்டு வீழ்த்தத் தயாரானுர்.

அருகே வந்த போதுதான் அது ஒரு கங்காரு என்பதும் அதன் வயிற்றின் பையில் ஒரு குட்டி இருந்ததும் அவருக்குத் தெரிய வந்தது.

குட்டியோடு உள்ள ஒரு தாயை எப்படிச் சுடுவது? தாயைச் சுட்டால் குட்டியும் கட்டாயம் சாக நேரிடும். இந்த எண்ணங்கள் அந்த மனிதரைக் கலங்கச் செய்தன. அருகில் வந்த போதுதான் கங்காருவும் அவரைப் பார்த்திருக்க வேண்டும். ஆனுலும் கொஞ்சமும் தயங்காமல் வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்து தண்ணீர்த் தொட்டியை நோக்கி நடந்தது. தொட்டியை அடைந்தவுடன் தன் உடம்பை வளைத்து குட்டியை நீரைப் பருகச் செய்தது.குட்டி தண்ணீர் குடித்து முடிந்த பின், தான் ஒரு வாய்த் தண்ணீர் கூட அருந்தாமல் அந்த வீட்டுக்காரரை திரும்பத்திரும்ப பார்த்துக் கொண்டே காட்டுக்குள் ஓடி மறைந்தது.

தான் கண்ட அந்தத் தாயன்பால்—பெருந்தன்மையால் செயலற்ற அந்த மனிதரின் கண்கள் குளமாகின.

நன்றி: தினமணிக்கதிர்.

அனுப்பியவர்: எஸ். சிவநேசன், கிரான்.

---

கோபம் வந்தால் இப்படித்தான் கோகிலா விழிச்சிண்டு நிற்கிருள்! எல்லோருமே அவளைத் திட்டுகின்றனர்! எல்லார் கண்களுக்குமே அவள் குற்றவாளியாக—அருவருக்கும் பிறப்பாகத் தெரிகிருள்! அவள் கண்களில் நீர் வருகிறது. வாய் ஒட்டிப்போய் — வார்த்தையே வரமாட்டேனென்கிறது.

இப்போ அவர் அவளை தர தர வென்று இழுத்திண்டு வருகிருர்! வழமை போல—அவளை யாரோ பிடிச்சிருக்க அவர் மரத்தோடு கட்டுகிருர்! எல்லோரும் இப்போ விலகி நின்று வேடிக்கை பார்க்கிருர்கள்! அவர் அடிக்கிருர்! உதைக்கிருர்! ஏசுகிருர்! திட்டுகிருர்! —'சாமி' வந்தது போல் துள்ளுகிருர்!

ஆனுலும் அவளுடைய அழுகையும் "ஐயா...நான்... எடுக்கலீங்க...! என்னை கொன்னுடாதீங்க. ஐயா!" —என்ற வார்த்தைகளும் தான் திரும்பத்திரும்ப வருகின்றன!

இப்போ அதுவும் இல்லை! அவள் மயங்கி விட்டாள். ஆனுலும்—முதலியாருக்கு திருப்தியில்லை! ஏன் அந்தக் குடும்பத்திற்கும்தான்!

இவ்வளவு நாளும்—தங்களுக்காக உழைத்தாளே—விசுவாசமாக இருந்தாளே—என்ற நன்றி கூட இல்லாமல்—பொலிஸில்—சொல்லி விட்டார்!

பெரிய இடத்து சமாச்சாரம் அல்லவா? அவர்கள் உடனே நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்களா? பொலிசும் வந்து அவளை கொண்டு போய்விட்டது!

* *

அன்றைய திருவிழாவில்—ஆண்டவனுக்கு—ஆறுபவுணில்—ஒரு சங்கிலி—முதலியார் அணிவிக்கிருராம்! ஏகப்பட்ட கூட்டம்! இறைவனை வணங்குகிற—பக்த கோடிகள்—இந்த புண்ணியவானையும் வணங்குகின்றன.'தர்மகர்த்தா "இவரல்லவோ மனிதர்' —பக்தகோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் முணுமுணுக்கிறார்கள்! பல பத்திரிகையாளர்களும் — படமெடுக்கிறார்கள்! பேட்டி காண்கிறார்கள்!

*  *

அடுத்த நாள் சில பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் தலையங்கம் தீட்டியிருந்ததைப் பார்த்ததும் முதலியார் அதிர்ந்தே போனார்! "காவல் நிலையத்தில் கோகிலா தற்கொலை"! "விசாரணைக்குச் சென்ற இடத்தில் வேலைக்காரச் சிறுமி தற்கொலை" என்ற தலைப்பில் செய்திகள் வெளியாகியிருந்தன!

உண்மையில் என்ன நடந்ததென்பது முதலியாருக்குத் தெரியும் 'அவளுக்கு அடிக்க வேண்டாம்' என்று தான் சொல்லியிருந்தார்! ஆனால் எப்படியாவது மிரட்டி மோதிரத்தை எடுத்துத் தரும் படி அவர்களுக்கு 'சம்திங்' கொடுத்திருந்தார்! ஆனால் அவர்கள் அடித்த இடத்தில் — பாவம் சிறுமியல்லவா?—இறந்தேவிட்டாள்! உடனே அவளை உயரமான கட்டிடமொன்றிலிருந்து கீழே போட்டு விட்டு, "விசாரணை செய்த இடத்தில் தப்பியோட முயன்று தற்கொலை செய்து கொண்டாள்"—என்று அறிக்கை கொடுத்திருந்தார்கள்!

*  *

முதலியார் இப்போ—பேயறைந்தவர் போல்—மனம் குறுகுறுக்க — வீட்டு வாசலில் அமர்ந்திருக்கிறார்! அவர் மூத்த மருமகள்—மோதிரத்தை கண்டெடுத்த குதூகலத்தில்... "மாமா மோதிரம் இருக்கு. நேற்றுப் பிள்ளையை குளிக்க வார்க்கிறப்போ நான்..கழட்டி சோப்கேசினுள் வைத்து விட்டு மறந்து விட்டேன். 'இன்னைக்கும் பிள்ளையை குளிக்க வார்க்கறப்போ.....தான்.....ஞாபகம் வந்தது!!"

அவள் வார்த்தைகளைக் கேட்டு—அவர் பதறிப்போய்—கீழேயே விழுந்து விட்டார்! மண்டையில் பலத்த அடி! எல்லோரும் அவரைத் தூக்கிப் பிடிக்கிறார்கள்!

ஆனாலும் நினைவில்லை!

அவருக்கு 'மார்பு வலி' 'இரத்தக்கோளாறு' இருக்கென்று யாரோ கதைக்கிறார்கள்!

யாரோ குடும்ப டாக்டருக்கு 'போன்' பண்ணுகிறார்கள்!

அவர் வந்த பிறகுதான் இவரின் நிலைமை தெரியும்!

(யாவும் கற்பனை)

---

## ஊரும் பேரும்

யாழ்ப்பாணத்திற்குக் கிழக்கே பத்துக் கட்டை தொலைவில், சாவகச்சேரி தொகுதியில் அமைந்துள்ளது மட்டுவில் எனும் பெரிய கிராமம். வடக்குத் தெற்காகப் பிரிக்கப்பட்டுள்ள இவ்வூர் வேரற்கேணிவேவில், விளைவேலி, இலுப்பையடி, நெணியன்புலம், முசுறிமாணுவளை எனப் பல பெயர்ப் பகுதிகளை கொண்டது.

மட்டுவில் வேற்பிள்ளை, மகாலிங்கசிவம், முத்து உபாத்தியாயர், இன்று கலாநிதிப் பட்டம் பெற்ற பண்டிதாமணி போன்ற தமிழ் அறிஞர்களையும், முன்னாள் ரயில்வே அதிபர் மா. கனகசபை'இந்நாள். பா. உ. வ. ந. நவரத்தினம் போன்ற பிரமுகர்களையும் பெற்றது மட்டுவில்.

பன்றித்தலைச்சியம்மன் கோவில், சந்திரமௌலீசன் கோவில், தாளையடி அம்மன் கோவில், வேரற்கேணி கந்தசுவாமி கோவில் ஆகிய வரலாற்றுப் புகழ் கொண்ட சைவத் தலங்களைத் தன்னகத்தே கொண்டது மட்டுவிலூர்.

மட்டுவிலுக்கு சந்திரபுரம் என மற்றொரு பெயரும் விளங்கியதெனத் தெரிகிறது. 'சந்திரபுர தலவாசனே' என முடியும் நூறு பாடல்களைக் கொண்ட ஈழ மண்டல சதகத்தை வேற்பிள்ளையவர்கள் பாடியுள்ளமையால் இப்பெயர் இன்றும் விளங்குகின்றது.

தேன் நிறைந்த ஊராக இருந்ததால் மட்டுவில் எனப் பெயர் பெற்றது என்பர் மூத்தோர். மட்டு—தேன். இல்—இடம். தமிழறிஞரைப் பெற்ற காரணத்தால் பொருத்தமான பெயரைத்தான் பெற்றிருக்கிறது என்பர் இந்நாள் அறிஞர்.

—எஸ். பி. கிருஷ்ணன், மட்டுவில்.

---

### வருந்துகிறோம்

இயற்கையின் சீற்றத்தால்
பாதிக்கப்பட்ட மீன்பாடும்
தேனாட்டு மக்களின் துயரத்தில்
நாமும் பங்கு கொள்கிறோம்.

ஆ-ர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேற்பு

-விசான் சந்திரகுமார்-

ஒரு முறை ஒரு மந்திரி புகையிரதம் மூலம் ஒரு ஊரிற்கு வந்தார். அவ்வூர்ப் புகையிரத நிலையத்தில் ஏராளமான மக்கள் குழுமியிருந் தனர்.

இதனைக் கண்ட மந்திரி மிக்க சந்தோஷத்துடன் தனக்கு அருகிலுள்ள அவ்வூர் அரசாங்க அதிபரிடம் "ஆகா! என்னை வரவேற்க இவ்வளவு மக்கள் குழுமியிருக்கிறார்களே! உங்கள் ஊர் மக்கள் என் மீதும், எங்கள் அரசாங்கத்தின் மீதும் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார்கள். நான் இவ்வூர் விஜயத்தை முடித்துச்சென்று எங்கள் பிரதமரிடம் இவ்வூர் மக்களின் அன்பைப்பற்றிக் கூறி இவ்வூர் மக்களின் கஷ்ட நஷ்டங்களைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்கச் செய்வேன் என்றார்.

இதனைக்கேட்டு அருகிலிருந்த அவ்வூர் அரசாங்க அதிபரும் ஒரு புன்முறுவல் உதிர்த்து விட்டு பேசாமல் இருந்துவிட்டார்.

மந்திரி வந்த புகையிரதமும் புகையிரத நியலைத்தில் வந்து நின்றது. அப்போது புகையிரத நிலையத்தில் குழுமியிருந்த திரளான மக்கள் முண்டியடித்துக்கொண்டு புகையிரதத்தை அணுகினர். இதனைக் கண்டதும் அந்த மந்திரிக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

அவர் மகிழ்ச்சியில் இருப்புக்கொள்ளாது "ஆகா! என் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார்களே இவ்வூர் மக்கள், இவர்கள் என்னை வரவேற்க முண்டியடித்துக்கொண்டு வருகிறார்களே இவர்கள் அல்லவா மக்கள்" என மீண்டும் மீண்டும் அருகிலிருந்த அரசாங்க அதிபரிடம் கூறினார் சந்தோஷத்தில்.

இவற்றை எல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அவ்வூர் அரசாங்க அதிபரும் "மேன்மை தங்கிய மந்திரி அவர்களே, இவர்கள் இப்படி முண்டியடிப்பது ஒன்றும் புதிதல்ல. இவர்கள் தினமும் இவ்வாறே இப்புகையிரதத்தில் வரும் மீனையும், செய்திப் பத்திரிகையையும் வாங்குவதற்காக இப்படி முண்டியடிப்பார்கள்" என்றார் அமைதியாக. பாவம் இதைக்கேட்டதும் மந்திரியின் முகத்தில் ஈயாடவில்லை!

# தனிமை வேண்டும்!

புதுவை இரத்தினதுரை

ஏணையிற் போட்டு ஆச்சி
என்னைத்தா லாட்டும் போது
ஆனையை வெல்வே னென்றாள்.
அகிலத்தை ஆள்வே னென்றாள்
பானையே தின்னக் காணோம்
பரம்பரைப் புகழேன் ஐயா
ஏனையா மீண்டும்; வேண்டாம்
எனக்கினித் தனிமை வேண்டும்.

பள்ளியில் எனக்குக் காதல்
படிப்பினைத் தொடக்கி வைத்த
கள்ளியைப் பிரிந்த போதும்
கலங்கிடா நெஞ்சம்; இன்று
உள்ளவர் சிலரால் எந்தன்
உறவினர் நண்பர் போன்ற
முள்ளுகள் சிலரால் தைத்து
முடிந்ததென் வாழ்க்கை போங்கள்.

எட்டிலே படிக்கும் போதே
இளங்குமர் மையல் கொண்டு
தொட்டபின் னறிந்த அந்தச்
சுடுநெருப் பதனை யாற்றக்
கொட்டில்கள் தேடித், தேடிக்
குடித்தவன்; குடித்த போதும்
விட்டதா நெருப்புச் சூடு
விடவில்லை அழுதே தீர்த்தேன்.

கன்னியர் அணைப்பில் நன்கு
கசங்கிய போது; காமப்
பெண்களின் சிரிப்பிற் கோடிப்
புதுப்புது உணர்வைப் பெற்றேன்
அன்னவர் இதழாற் பெய்த
அமுதனீர் போதை யேற்ற
என்னையே மறந்தேன்; உண்மை
எனக்கினித் தனிமை வேண்டும்

வஞ்சகம், சூது, எம்முன்
வலிந்துமே நடிக்கும் போலி
நெஞ்சினர் நிறைந்தே புள்ள
நிலத்தினில் இனியும் வாழ
அஞ்சியே துடிக்கு மென்னை
யாருமே யற்ற தீவில்
கொஞ்சநாள் விடுங்கள்; இன்றேல்
குடித்திட நஞ்சைத் தாரும்.

பட்டணத் தடிகள் சென்ற
பாதையிற் தொடரு மெண்ணம்
விட்டவன்; ஆறு லின்று
விரிந்துபின், சுருங்கி, வாழ்ந்து
கெட்டவன்; அதனு லிந்தக்
கேவலம் பிடித்த வையம்
முட்டிடும் போதி லெல்லாம்
மூலையிற் தனிமை பார்ப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நடந்தான்... முடிவே தெரியாது நீண்டுகிடந்த அந்தப் பயங்கரப் பாலைவனத்திலே...... நாக்கு வரள...... உள்ளம் துடிக்க, கால்கள் பின்ன...... அவன் நடந்து கொண்டிருந்தான். பாலைவனத்தின் கொடிய வெயில் அவனை வதைத்தது, வாட்டியது, ஒரு பசிய நிறத்தையாவது காணமாட்டோமா?...



# அக்கிரமங்கள் அழிக்கப்படுகின்றன

தறவாக்கேணி — முத்துமாதவன்



என்று வெறிபிடித்தவன் போல விரைந்து ஓடினான், களைப்பு மேலிட்டு, வியர்வை வெள்ளமாகப் பெருகி, கண்கள் சொருகி... அவனது வாழ்வு அந்தப் பாலைவனத்திலே அஸ்தமனம் ஆகப்போகிறதா? 'கடவுளே என்னைக்காப்பாற்று' வெளியே சத்தம் வராது தொண்டையின் உள்ளே சங்கமித்தது. அப்போது...

வடக்கையும் கிழக்கையும் சேர்த்து இணைத்தாற் போன்ற நீண்ட பசுமரக்காட்சி... அவனது மயங்கிய கண்களின் ஊடே தெரிந்தது.. அற்புதமொன்றை கண்டவன் போல ஆனந்தக்கூத்தாடினான், இனி வாழ்வோம் என்ற நம்பிக்கை பிறந்தது, அவனது உடலிலே புத்துணர்வு பொங்கியது, ஆரவாரித்தவாறு பசுஞ்சோலை காட்சிதந்த திசைநோக்கிப் பறந்தோடினான். நீர்த்தடாகத்தில் நீந்தி மகிழ்ந்த தென்றல் ஜில்லென்று வீசிற்று, பூங்குயிலின் இனிய கானம் தென்றலுடன் கலந்து வந்தது.

மூச்சைப்பிடித்து... தனது சக்தியெல்லாம் திரட்டி ஓடியவன் சோலையை அண்மித்தான்... மறுகணம், சுருண்டு வீழ்ந்தான். நினைவு தப்பிற்று, நினைவு திரும்பியது, கண்கள் திறந்தது... சுற்றிலும் பார்வையை ஓடவிட்டான்...... சொர்க்கலோகமா?... தேவர்கள் ஓய்வெடுக்கும் திருச்சபையா?... எண்ணற்ற மலர்க்குவியல். மனதைமயக்கும் மணக்காடு. ஆடும் மயில்கள், பாடும் குயில்கள், தரையெங்கும் சிதறிக்கிடந்த முக்கனிகள், கனிச்சாற்றை ஆசையாய் அமர்ந்து சுவைக்கின்ற வண்ண அணில்கள், உலவுகின்ற புள்ளிமான்கள், சிலு சிலுவென்று ஆடிவரும் அருவி...... காதல் மொழி கொட்டும் கிளிகள்.

வியந்தன அவனது விழிகள். வாடிய நெஞ்சம் மலர்ந்தது. இழந்தபலம் ஏறியது. மெல்ல எழுந்தான். அழகான ஆசிரமம்... தெய்வமணம கமழும் திருவிடம். அவன் வாழ்நாளிலே காணாத, காண முடியாத அற்புதவனம். இயற்கையின் அழகை விழியால் பருகினான்; வயிறு நிறைந்தது, தன்னை மறந்து நின்றவனின் தோளிலே ஒருகரம் விழுந்தது, திடுக்கிட்டு திரும்பினான், கடவுள் மனித உருவானாற் போல ஒருவர்... கற்பனைக் கெட்டாத... காவியம் வடிக்காத, அதி அற்புத அழகு பொருந்திய ஒரு கன்னி..

அவன் சிலையானான்... பேச முடியாத ஊமையானான், ஞானி... சிரித்தார் "என்ன... மகனே, பாலைவனத்திலே இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி ஒரு சோலை வனம், மனித வாடையே இல்லாத மண்டபத்தில் மங்கையும் நானும்... புதுமை என்று சிந்திக்கிறாயா?''

அவன்...... வாய் தடுமாறிற்று... அவரது மொழி அவனுக்கு விளங்கவில்லை. புன்முறுவல் பூத்தான்... ஞானியை தாண்டி பின்னால் பதுமையாய் நின்று பாவையின் மேல் அவன் மனம் லயித்தது. அவன் பேசினான், அவனது மொழி அவர்களுக்கு விளங்கவில்லை, நிமிடங்களை நாள் விழுங்கியது, பல பூரணைகள் ஓடி மறைந்தன... மொழி புரியாததால், சங்கேத உணர்வுகள் பரிமாறப்பட்டு அவன் அவர்களில் ஒருவனானான், அவர்களுக்கு சேவை செய்யும் புனித மனிதன் ஆனான்,

காலம் விரைகையில்,...... கனிச்சாறு புளித்தது. தேனும் தினையும் வெறுத்தது........ அவனுள் ஒரு மாற்றம் ஏற்பட்டது... சுதந்திரமாய் உலவிய மான் ஒன்றை கொன்றான், மறுநாள்...... மயில் ஒன்றை உணவாக்கினான், கிளிகளை வதைத்து விருந்தாக்கினான்.

குயில்களை வாட்டி உண்டான்... ஞானி தடுத்தார். மங்கை பதறினாள், கருணை வீசிய ஆசிரமம் கசாப்பு கடையாயிற்று. கடவுள் வாழ்ந்த இடம் நரகமாயிற்று... வாழைகள் வெட்டி வீழ்த்தப்பட்டன. வண்ணக்கனிமரங்கள் சாய்த்துவிடப்பட்டன...... புனித ஏரியிலே புழுக்கள் நிரம்பிற்று, உலவிய மான்கள் ஒளித்துக் கிடந்தன, பாடிய குயில்கள் பயந்து நடுங்கின...... மயில்களோ. மறைந்துவிட்டன...... ஞானி நிஷ்டையில் அமர்ந்தார். அவனை எதிர்க்க வல்லமையிருந்தும், எரித்து அழிக்க சக்தியிருந்தும், ஓட்டி விரட்ட உரிமையிருந்தும், உள்ளம் தடுக்க, இறைவனை வேண்டினார்-

இருப்பவை எல்லாம் அழிந்தபின்னும், அவனது வெறி தணியவில்லை, தனிமையில் இருந்த கன்னியை நாடினான். அவளது அழகு அவனைப் பித்தனாக்கியது. காம வெறி தலைக்கேறியது, அவளது, கரங்களைப் பற்றி இழுத்தான். கண்ணீர் புரள... உள்ளம் துடிக்க அவள் பெருங்குரல் இட்டு அழுதாள்; புரண்டாள் போராடினாள். அப்போது...!

பெரும்புயல் வீசிற்று. இடி முழக்கம் ஓலமிட்டது. மயில்கள்... குயில்கள், மான்கள்... கிளிகள். அனைத்தும் அவனை ஒன்றாய்த் தாக்கின, கன்னியை விட்டு கயவன் ஓடினான், மயில் கண்களை கொத்த, மான் கொம்புகளால் குத்திவீச, கிளி சதைத்துண்டுகளை நறுக்கி எடுக்க, அவன் மரண ஓலமிட்டபடி.. பாலைவனத்திலே ஓடினான்... சுதந்திரமான பூமியை சூறையாடிய துரோகி, சுதந்திரமான ஆசிரமத்தை சுடுகாடாக்கிய பாவி... உயிர் கொடுத்தவர்களை அழிக்க நினைத்த அரக்கன். கிழிந்து தொங்கிய சதைப்பிண்டங்களோடு ஓடினான். வந்த இடத்தை வாடிக்கையாக்க நினைத்தவன் வந்த வழியே வதைப்பட்டு ஓடினான்.

உதயசூரியன்...... தனது பொற்கிரகணங்களை, பூஞ்சோலை மீது பாயவிட்டான்...! போர்க்களமாக கிடந்த பூமியை... ஞானியும் மங்கையும் புனித நிலைக்கு கொண்டுவர முயன்றனர். பூங்குயில் ஒன்று உரத்த தொனியில் விடுதலைக்கீதம் பாடிற்று.

## அஞ்சலி செய்வோமே!

''தமிழ்மணி; திருத்தவமணி; தமிழணங்கு
அவனிக்களித்த குருமணி—எங்கள்
குலத்திற் கோரொளியாய் குணங்காத்து
இலக்கிய கூடராய் சூழ்ந்திருந்த
தூமணி; துய்ய தமிழ் தழைக்க
அகவிருளைத் துவம்சித்த தெய்வப் பெரு
புலவர் மணி! அந்த விண்ணுக்
கொளி பயிய எம்மிடை துறந்து,
மீளாத் துய ரிருள்தந்தேகிய கண்மணி;
எம் கருத்தி லென்னும்அத் துங்கமணி
தன்னொளி தங்கியிருத்தலால்
அவ்வொளிக்கீழ்
அமர்ந்ததர்க்கே அஞ்சலி செய்திடுவோமே!...''

—செல்வி எம். இந்து

## அமர இலக்கியம்

"வாழ்க்கையில் காதல் ஒன்றுதானா பிரதானம்? தியாகத்துக்கு இடமே இல்லையா? இதனால்தான் இன்று நாம் ஊமைகளாக — பேடிகளாக மாற்றானின் அதிகாரத்துக்குத் தலை குனிந்து நின்றோம். அறிவைக் 'கிளறுவதுதான் இலக்கியம்..."

"அழகிய முகத்தைப்பற்றி முப்பது பக்கம் எழுதுவதைவிட, தியாகிகள் சிந்திய இரத்தத்தைப் பற்றி மூன்று வரிகள் எழுதினால் போதுமே. அதுதான் அமர இலக்கியம்.

— ராசு நல்லபெருமாளின் கல்லுக்கு ஈரம் எனும் நாவலிலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான தீபாவளித் திருநாளன்று, காலை பதினொருமணி. எழுத்தாளர் ஆரையம்பதி ஆ. தங்கராசா அவர்களின் இல்லத்திற்குச் செல்கின்றோம். தீபாவளியின் பிரதிபலிப்பு எழுத்தாளரின் கவனத்திலும் தெரிகிறது.

வந்ததும் வராததுமாக உபசரிப்பே நடைபெறுகின்றது. வந்த நோக்கத்தை எழுத்தாளரிடம் சொல்கின்றோம். "அதற்கென்ன?" என்ற கேள்வியே எமக்குப் பதிலாக அமைகின்றது. பேட்டி தொடர்கிறது.

# கண்டோம் கருத்தறிந்தோம்!

கேள்வி: தங்களது ஆரம்ப எழுத்து முயற்சிக்குக் காரணமாக அமைந்தது எது? சமூக இடர்பாடுகளா அல்லது காதலா?

பதில்: ஆரம்ப காலத்தில் இருந்தே எனக்கு தி. மு. க. வில் ஒரு பற்று இருந்து வந்தது. அண்ணா போன்றவர்களின் எழுத்துக்களும், உணர்ச்சிமயமான சொற்பொழிவுகளும், இயற்கையிலேயே என்னிடமிருந்த எழுத்தாற்றலை ஆர்வப்படுத்தியது,

அடுத்தது இனக்கலவரமும் எனது உணர்ச்சியைத் தூண்டியது. ஆகவே எழுதினேன்.

கேள்வி: தங்களது சிறுகதைகளில் "நியூ வேவ்" அதாவது புதிய அலைகளுக்கு இடமளிக்க விரும்புகின்றீர்களா?

பதில்: நியூவேவினால் சமூகத்தில் எந்த விதமான மாற்றங்களையும் செய்ய முடியாதென்பதே என் கருத்து. ஆகவே அதனை நான் விரும்பவில்லை.

கேள்வி: சிறுகதைகள் மூலம் தாங்கள் சாதிக்க விரும்புவது என்ன?

பதில்: எழுத்தாளன் என்பவன் ஒரு பொறுப்பு வாய்ந்த சமூகச் சிற்பி. அவன் எழுத்துக்கள் ஒரு படிப்பினை பொருந்தியவையாகவும் இருக்கவேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். சமூகத்தில் உள்ள அழுக்குகளையும், குறைகளையும் போக்குவதற்கு என் எழுத்துக்கள் பயன்பட ஏதுவாக இருக்குமாயின் அதுவே எனது எழுத்துக்களின் அறுவடையாகும்.

கேள்வி: நாடகத்துறையிலும் தாங்கள் ஈடுபட்டவர் என்பதால் இதுவரையில் தாங்கள் மேடையேற்றிய நாடகங்கள் எத்தனை?

பதில்: நான் எழுதிய நாடகங்களில் "தமிழுக்கு உயிர் தந்தான்", "போடியார் மகளுக்கு" என்ற இரண்டு நாடகங்களும் தங்கப்பதக்கங்களைப் பரிசாகப் பெற்றுள்ளன. திருச்சி வானொலியில் "வாழ்வின் பெருமூச்சு" என்ற ஒரு மணிநேர நாடகம் ஒலிபரப்பாகியுள்ளது.

இவைகளைத்தவிர அவ்வப்போது பல நாடகங்களை மேடையேற்றி உள்ளேன். இலங்கை வானொலி போன்ற பொறுப்புள்ள ஸ்தாபனங்கள் ஊக்கமளித்தால் என்னைப் போன்றவர்களின் ஆக்கங்களை பொது மக்கள் இரசிக்க வழியேற்படும்.

கேள்வி: சாதிப் பாகுபாட்டுக்கு தங்களது எழுத்துக்கள் எந்தவிதமான மருந்தைத் தர முயல்கின்றன?

பதில்: சாதிப்பாகுபாட்டுக்கு வேட்டு வைப்பதே எனது மானசீகமான எண்ணம். இந்த அடிப்படையில்தான் நான் எழுதி வந்துள்ளேன். எழுதுகின்றேன். முக்கியமாக நான் எழுதியுள்ள கவிதைகளில் இதுவே அடிநாதமாகவும் அமைந்து வந்துள்ளது.

கேள்வி: சிறுகதை இலக்கியத்துறையில் தமிழ் நாட்டோடு நம்மை ஒப்பிடும் போது நமது நிலை என்ன?

பதில்: நமது நாட்டின் சிறுகதைகள் கலை, இலக்கியப் பாசறையில் கடைந்தெடுத்த அமுதம் போன்றவைகளாகவே இருக்கின்றன என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். காரணம் வியாபார நோக்கத்தில் இங்கு சிறுகதைகள் வெளியாவதில்லை. தமிழ் நாட்டில் வியாபார நோக்கத்தில் ஈசல்கள் போல் வெளிவரும் சிறுகதைகளைப் படிக்கும் போது நிச்சயம் நமது சிறுகதை எழுத்தாளர்கள் பெருமைப்படலாம்.

கேள்வி: சாதாரண வாசகனை கலை, இலக்கிய வாசகனாக மாற்ற தங்களது ஆலோசனைகள் என்ன?

பதில்: பொழுதுபோக்குக்காகப் படித்து ஊறிப்போனவர்கள் நம்மவர்கள் நமது வாசகர்கள். இப்போது தங்களது நிலைப்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று மாற்றத்தோடுதான் இருக்கிறுர்கள். இதற்கு நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான எழுத்தாளர்கள் ஒரு தசாப்த காலமாக போராட்டம் நடாத்தி வந்துள்ளார்கள். எத்தனை நாட்களுக்குத்தான் இடித்த மாவை இடிப்பது?

இப்போது வந்து குவிந்துள்ள மர்ம நாவல்களும், உப்புச்சப்பற்ற உதவாக்கரைகளும் விற்பனையாகாது தேக்கநிலையில் இருப்பதுவும், கலை, இலக்கிய சஞ்சிகைகள் பெரும்பாலாக விற்பனையாவதும் ஒரு நல்ல சகுனம். இந்த சூழலை வசதிபடைத்த பிரசுர கர்த்தாக்களும், சஞ்சிகை ஆசிரியர்களும் பயன்படுத்திக்கொள்ளுதல் உத்தமமானதாகும்.

கேள்வி: "சுடர்" பற்றிய உங்களின் கருத்தென்ன?

பதில்: வியாபார நோக்கமே இல்லாது, கலை, இலக்கியத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து, நமது மொழி, நமது கலை, நமது இலக்கியம் என்ற உணர்ச்சியோடு இளஞ் சந்ததிக்கும் ஊக்கம் கொடுத்து, உரிமைகளுக்கான உணர்வினை படிப்படியாக ஊட்டி, தரமான பத்திரிகையாகத் திகழ்கின்றது. தொடர்ந்து என்றுஞ் சுடர் ஒளி வீச நமது இனம் கைகொடுத்து உதவுதல் கட்டாய கடமையாகும்.

செவ்வி: "ஊடாடி"

காத்தான்குடி.



# இரக்கம்!

செ. குணரத்தினம்.

எங்களது வீட்டுக்கு
இடப்பக்கம் ஓர் ஒழுங்கை
இருக்கிறது!
அந்த ஒழுங்கைக்கு
அருகினிலே ஓர்வீடு
இல்லையில்லை!
சின்னக் குடிசையொன்று
சிறகொடிந்த பறவையைப்போல்
தெரிகிறது!
வந்து நின்று பாருங்கள்
வசதியற்ற தங்கம்மாவின்
வாசல் தலம்தானது!

புழுதி பறக்கின்ற
புற்றுமண் முற்றத்தில்
புழுக்களைப் போல்
தவழ்ந்து விளையாடும்
தங்கம்மா பெற்றெடுத்த
தங்கங்கள்
இருக்கின்ற கோலத்தை
இங்குவந்து பாருங்கள்!
இவர்களுக்கு

வயிறுர உணவில்லை!
வடிவான சட்டையில்லை
புழுதி மண்முற்றத்தில்
படுத்துறங்கி
பார்ப்பதற்கு
பேய்க்குஞ்சு போலிவர்கள்
பகல் முழுதும்!
தவிடு அள்ளப்போன
தங்கம்மா வருமளவும்
தவிப்பார்கள்!

என்றுலும் வசதியுள்ள
எங்களது பிள்ளைகள்போல்
இவர்களுக்கு
தடிமல் வருத்தம்,
தலையிடி, காச்சலென்று
ஒரு நோயும்
இதுவரைக்கும்
வந்ததில்லை!
இறைவனுக்கு
இவர்களின் மேல்
இரக்கம் போலும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெர்னாட்ஷாவும் அமெரிக்க பத்திரிகைகளும்

நாடக உலகில் நகைச்சுவை நாடகங்களை எழுதி சர்வதேசப் புகழைப் பெற்றுக் கொண்டவர் பெர்னாட்ஷா என்பதை அறியாதவர்கள் மிகச் சிலரே.

இவர் ஒரு முறை அமெரிக்காவுக்கு தமது மனைவியுடன் விஜயம் செய்தார். அமெரிக்கருக்கோ அமெரிக்கப் பத்திரிகைகளுக்கோ பெர்னாட்ஷாவைக் கொஞ்சம் கூடப்பிடிக்காது. காரணம்-அமெரிக்கரை வெகுவாகக் கிண்டல் செய்வதில் பெர்னாட்ஷா எப்பொழுதும் முன்னணி வகிப்பவர். இதனால் பெர்னாட்ஷாவின் அமெரிக்க விஜயத்தை ஏளனம் செய்து அமெரிக்கப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிடலாயின. இதற்கு அவர்கள் கையாண்ட முறை பெர்னாட்ஷாவுடன் கூடவே வந்த திருமதி பெர்னாட்ஷாவுக்கு செய்திகளில் முக்கியத்துவம் கொடுத்தன.

இதன்படி அமெரிக்கப் பத்திரிகைகள், "திருமதி பெர்னாட்ஷா அமெரிக்காவுக்கு வந்துள்ளார்."

"அவர் இன்று மியாமி கடற்கரையில் மக்களுடன் உரையாடினார்."

"அவர் சுதந்திர சிலையை பார்வையிட்டார்."

"வாஷிங்டனில் ஒரு கூட்டத்தில் பேசினார்."

"பல்கலைக்கழக மாணவர்கள் அளித்த விழாவொன்றிலும் அவர் கலந்து கொண்டார்."

என்பன போன்ற செய்திகளை வெளியிட்ட அமெரிக்கப் பத்திரிகைகள் தமது செய்தியின் இறுதியில் 'திருமதி பெர்னாட்ஷாவுடன் திரு. பெர்னாட்ஷாவும் அமெரிக்கா வந்துள்ளார். திரு. பெர்னாட்ஷோ ஒரு நாடகாசிரியர் என தெரிய வருகிறது' எனவும் குறிப்பிட்டு அவர் மீது கொண்டிருந்த ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டன.

தகவல்: சுகுமார்,
மருத்துவபீடம்,
யாழ்ப்பாண வளாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் நோய்க்கு மருந்து

கடுக்காயைப் பொடி செய்து தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்த பின், நன்றாக வடிகட்டி சூடு ஆறிய பிறகு கண் நோய் உள்ளவர்கள் கண்களைக் கழுவி வர, கண்ணில் சிகப்பு நிறம் மாறும். அக்கஷாயத்தை உள்ளுக்குச் சாப்பிட்டால் நீரிழிவு குணமாகும்.

வாய்ப் புண் உள்ளவர்கள் அக்காஷாயத்தை கொப்பளிக்க வாய்ப் புண் ஆறும்.

கடுக்காயை பொடி செய்து பல் தேய்க்க பல்வலி, ஈறிலிருந்து இரத்தம் வடிதல், ஈறு வலி குணமாகும்.

பச்சைக் கடுக்காயை பாலில் அரைத்துச் சாப்பிட இருமல், சீதபேதி நீங்கும்.

—தொகுப்பு:
செல்வி சா. யோகமலர்,
கிரான்.

# வயிறு சுருங்க......

சில பெண்களுக்கு வயிறு உப்பி பெரிதாய் பார்ப்பதற்கு அசிங்கமாக இருக்கும். இதைப் போக்க என் அனுபவத்தில் ஓர் எளிய வழிமுறையைப் பின்பற்றி வெற்றி கண்டதை உங்களுக்குச் சொல்கிறேன்.

அன்னாசிப் பழத்தை சிறு, சிறு துண்டுகளாக அரிந்து கொள்ளவும். இதோடு அயமோதகம் (ஓமம்) என்ற மருந்தை 4 டீஸ்பூன் பொடித்துப் போட்டு நன்றாகக் கிளறி, ஒரு டம்ளர் தண்ணீரில் நன்றாக வேக விடவும். இதை இரவில் செய்து வைத்து விட்டு மறு நாள் காலையில் சுமார் 5 மணி அளவில் இதைப் பிழிந்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிடவும். இதை 10 நாள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் வயிறு வற்றி, பார்க்க அழகாக இருக்கும்.

தொகுப்பு:
திருமதி ஜெயந்தி யேசுதாசன்,
பொத்துவில்.

# மாம்பழ அல்வா

தேவையானவை:

தோல் நீக்கி நறுக்கிய 3 கப் மாம்பழத் துண்டுகள். ஒரு கப் சீனி. 2½ கப் பால். சிறிதளவு குங்குமப்பூ.ஏலக்காய்ப்பொடி.

செய்முறை:

மாம்பழத் துண்டுகளை நன்றாகப் பிசைந்து கொண்டு மற்றவைகளையும் அதனோடு சேர்த்து ஒன்றாகக் கலந்து வாணலியிலிட்டு அடுப்பிலேற்றி, மிதமான சூட்டில் நன்றாகக்கிளறவும். அக்கலவை ஓரளவு பதமாகி, வாணலியில் ஒட்டாத நிலை வரும் போது அடுப்பிலிருந்து இறக்கவும்.

பின்னர், நெய் தடவிய ஒரு தட்டில் இந்த அல்வாவை மாற்றி, அது நன்கு ஆறிய பின் துண்டுகளாக வெட்டி விடவும்.

இப்பொழுது மிகவும் சுவையான 'மாம்பழ அல்வா' தயார்!




# மாம்பழ சாதம்!

தேவையானவை:

2 கப் அளவு குறைவான சாதம், 2 கப் பால், ½ கப் நெய், 2 கப் சீனி, 2 கப் தோல் நீக்கிய மாம்பழத் துண்டுகள் சிறிதளவு மஞ்சள் பொடி, உப்பு, ரோஸ் வாட்டர், ஏலக்காய்ப் பொடி, முந்திரிப் பருப்பு.

செய்முறை:

முதலில் பாலைச் சரி பாதியாக வற்றும் வரை காய்ச்சவும், அத்துடன் நன்றாகப் பிசைந்த மாம்பழக் கூழ் சீனி, மஞ்சள் பொடி, உப்பு ரோஸ் வாட்டர், ஏலக்காய்ப் பொடி, ஆகியவைகளை ஒன்றாகக்கலந்து கிளறவும். இக்கலவை ஒன்றாகி நல்ல கடினப் பதமாகியதும் அடுப்பிலிருந்து இறக்கி, அதனுடன் நெய்யைச் சேர்க்கவும்.

பிறகு லேசாக நெய் தடவிய தட்டில் இந்த மாம்பழக் கலவையையும் சாதத்தையும் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு கலந்து விடவும். இப்பொழுது மிகவும் சுவையான மாம்பழ சாதம் ரெடி!

தேவைப்பட்டால் நெய்யில் வறுத்த முந்திரிப் பருப்புகளைச் சேர்த்து விடுங்கள்.

செல்வி க. சுபாஷினி,
கிரான்

## இரண்டு நாற்காலிகள் போடு!

ஹென்றி போர்டைப் பார்க்க ஒருவர் வந்தார். "நான் ஸிட்ரன் கம்பெனியின் மானேஜர்" என்று அவர் சொன்னதும் போர்ட் பக்கத்தில் நின்ற தம் வேலையாளைப் பார்த்து, "அவர் உட்கார ஒரு நாற்காலி போடு" என்றார். வந்தவர், "நானே தான் அந்தக் கம்பெனியின் டைரக்டரும் கூட" என்று சொன்னதும் போர்ட் வேலையாளைப் பார்த்து, "அவர் உட்கார இரண்டு நாற்காலிகள் போடு!" என்றார்.

—நாடோடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் கருத்துக்கள்



## சங்கீத ஞானம்

ஒரு சங்கீத வித்துவான் சுலபமாக அரசியல் வாதியாகிவிடலாம். ஆனால் ஓர் அரசியல் வாதி சங்கீத வித்துவானாக ஆவது என்பது திடீரென இயலாத காரியம். எந்த ஓர் அரசியல் கட்சியின் தலைவரும் இதுவரை சங்கீதப் பயிற்சி பெறாமல் இருந்து—'நாளை முதல் நான் சங்கீத வித்துவானாக ஆகப்போகிறேன் அல்லது ஆகிவிட்டேன்' என்று சொன்னால் அதை உலகம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்காது. அரசியல் மேடை சுலபமாக அடையக் கூடியது.. ஆனால் சங்கீத மேதா விலாசம் என்பது அவ்வளவு சுலபமானது அல்ல,

— சென்னை கிருஷ்ண கானசபா கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டது.

## யார் இதயமற்றவர்?

யாரும் இதயமற்றவர்கள் அல்ல; இதயமற்றவர்கள் உயிரோடு வாழ முடியாது. ஆனால் கண்ணற்றவர்கள், காலற்றவர்கள், ஊனமுற்றவர்கள் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உயிரோடு வாழ்ந்து கொண்டு உதவி செய்யாமல் இருந்தால் அவர்களுக்கு இதயம் இருந்தாலும் இல்லாதவர்களாகத் தான் கருதப்படுவார்கள்.

— சென்னை செவிடர், குருடர் பள்ளி விழாவில் பேசுகையில் கூறியது.

## அவசரப்படாதீர்கள்!

அநேக இளம் எழுத்தாளர்கள் தங்கள் ஆக்கங்களை அனுப்பிவிட்டு தங்கள் படைப்புக்கள் 'எப்போது பிரசுரமாகும்' என்று கேட்டு அடிக்கடி கடிதங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பதில் எழுதுவது சிரமமாக இருக்கிறது.

தயவு செய்து அவசரப்படாதீர்கள். அவ்வப்போது தரங் கண்டு படைப்புகள் பிரசுரமாகும். மனந்தளராது தொடர்ந்து எழுதுங்கள்.

## பேய் இசை

இன்று திரைப்படம், நாடகம், இசை போன்ற ஆயிரக் கணக்கான மக்களைக் கவர்கின்ற இடங்களில் மரபு வழி இசை மங்கிப் போய், பேய் இசை, தாய் இசைபோல தலையில் தூக்கி வைக்கப்பட்டு கொண்டாடப்படுகின்ற கொடுமையைத் தான் காணமுடிகிறது.

—சென்னை மியூசிக் அகடமி விழாவில் பேசியது.

## பெரியார் பண்பு

ஒரு பொது நிகழ்ச்சிக்கு பெரியார் வந்து உட்கார்ந்த பின், அங்கே பாடப்படுவது தமிழ்த்தாய் வாழ்த்தாக இருந்தாலும், கடவுள் வாழ்த்தாக இருந்தாலும் இரண்டு பேர் பிடித்துக் கொள்ள பெரியார் எழும்பி நின்று மரியாதை செலுத்தியதற்குக் காரணம், அந்த வாழ்த்தின் மீது—அந்தச் சொற்களின் மீது உள்ள அன்பால் அல்ல; அதை மதிக்கின்ற மக்களுக்கு தம் மரியாதையைக் காட்ட வேண்டும் என்ற உயர்ந்த உணர்வுதான் காரணம்.

## ராஜாஜியின் பெருந்தன்மை

மரணப் படுக்கையில் இருந்த ராஜாஜியை நான் காணச் சென்றிருந்தபோது — என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு "உன்னை நான் கடைசிவரை கைவிட மாட்டேன்" என்று சொன்னார். அது, கண்ண பரமாத்மாவின் காலடியில் அமர்ந்து வரம் கேட்ட அர்ஜுனனின் நிலையில் நான் இருப்பது போலத் தோன்றியது.

— சென்னையில் நடைபெற்ற ராஜாஜி நினைவு நாள் விழாவில் கலைஞர் பேசியது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரம்

கிளியொன்று கதறுகின்றது.

பாவம்! அது ஒரு பச்சைக் கிளி.

அதற்காகவென்றே உருவாக்கப்பட்டுள்ளது தங்கக் கூடு.

பால், பழம் இவற்றிற்கும் குறைவில்லை.

எனினும்,
அந்தக் கிளி கதறுகின்றது.

இதோ! கூண்டைக் கொத்தியதினால் அதனுடைய மென்மையான அலகுகள் கிழிந்துவிட்டன.

கூண்டுக்குள் இருந்து வெளியே வந்து சுதந்திரமாக வாழ்ந்திடத் துணிந்திட்ட கிளி போராட்டத்தில் மும்முரமாக ஈடுபடுகின்றது. கோழிக்குஞ்சு முட்டைக்குள் இருந்து வெளியே வரும்போது, தனது பிஞ்சுச் சொண்டால், முட்டையைப் பிய்த்துக் கொண்டே வெளியே வருகின்றது.

கருப்பைக்குள் கிடக்கும் மானிடச் சிசுவும், அன்னையின் வயிற்றை உதைத்துக் கொண்டேதான் வெளியே வருகின்றது.

எங்கும் எதிலும் போராட்ட மயம்!

அதுவே விடுதலையைத் தருகின்றது.

எனவேதான், அடிமைப் படுத்தப்பட்ட கிளியும் தனது விடுதலைக்காகப் போராடுகின்றது.

ஆறறிவு பெறாத பறவை வர்க்கத்திடமே இத்தகைய ஒரு அடிமையாகாத்தனம்.

இந்த அடிமையாகாத்தனம் மனிதவர்க்கத்திடம் தோன்றும்போது, அது ஆதிக்க வர்க்கத்தால் அடக்கி, மிதிக்கப்படுகின்றது.

**க. கலாமோகன்**

ஆனால் இந்த அடக்குமுறைகளால் என்ன பயன்?

ஒரு இனத்தின் சுதந்திர உத்வேகத்தின் முன், ஆதிக்க வர்க்கத்தால் கட்டவிழ்த்து விடப்படும் ஆயிரம் கோடி அடக்குமுறைச் சட்டங்களும் தூசு என்பதைத்தானே சரித்திரம் நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஒரு மனிதனிடமிருந்து பெருகும் சுதந்திர வேட்கையைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது.

அன்று தொட்டு இன்று வரை இவ்வுலகில் ஏராளம் சிந்தனையாளர்கள், அறிஞர்கள், ஞானிகள், மேதைகள் தோன்றியுள்ளார்கள்,

இவர்கள் அனைவரினதும் கருத்துக்கள் சுதந்திரத்துக்கு ஆதரவாகவே அமைந்துள்ளன.

"உயிரைக்கொடுத்தேனும் சுதந்திரத்தைப் பெறுங்கள்" என்று ஊக்க மொழி கூடக் கொடுத்துள்ளார்கள்.

"சத்தியமே செயம்" என்ற அண்ணல் மகாத்மா கூட "சுதந்திரம் நமது பிறப்புரிமை" என்று முழங்கிச் சென்றார்.

பஞ்சணையில் துயின்று, பால், பழம் உண்டு வாழ்வதன் மூலம் சுதந்திரத்தைப் பெற முடியுமா?

ஒருபோதும் முடியாது.

## மாதங்கள் கணக்கிடும் முறை

திடீரென, குறிப்பிட்ட ஒரு மாதம் என்ன தேதியில் முடிவடைந்தது அல்லது என்ன தேதியில் முடிவடைகிறது என்று யாரும் உங்களைக் கேட்டால், எளிதில் சொல்லிவிட முடியாதல்லவா?

ஆனால், எமது கை விரல்களை மடித்துக் கொண்டு புறங்கையில் உள்ள விரல் மேடு பள்ளங்களை எண்ணி விரைவாகச் சொல்லிவிடலாம்!

இடது கை விரல்களை நன்றாக மடித்துக் கொள்ளுங்கள், பின்பு (பெருவிரல் தவிர) சுட்டு விரல் மேட்டை, தை என்று தொடங்கி அடுத்த பள்ளத்தை மாசி என்று தொடர்ந்தால், சின்னி மேடு வரை ஆடியாகும். மீண்டும் சுட்டுவிரல் மேட்டைத் தொட்டு ஆவணி என்று தொடர்ந்தால், மோதிர விரல் மேடு மார்கழியில் முடிவடைகிறது.

மேடுகளில்வரும் மாதங்கள் 31 திகதிகளையும், பள்ளங்களில் வரும் மாதங்கள் 30 திகதிகளையும் குறிக்கும். சுட்டு விரல் மேட்டுக்கு அடுத்த பள்ளத்தில் வரும் மாசி மாதம் -சாதாரண வருடத்தில் 28 தேதிகளையும், லீப் வருடத்தில் 29 தேதிகளையும் குறிக்கும்!

அனுப்பியவர்:
க. மாணிக்கம், அச்சுவேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசிகமணி கனக-செந்திநாதன் நினைவுச் சிறுகதைப்போட்டி

இரசிகமணியின் மீது இலக்கிய அன்பு உள்ள நண்பர்கள் சிலர் சுடரின் ஆதரவுடன் ஒரு சிறு கதைப் போட்டியை நடத்த முன் வந்துள்ளனர்.

* சிறு கதைகள் 6 முழுத்தாளிற்கு மேற்படாமல் சமூகப்பார்வை உள்ளனவாக எழுதப்படல் வேண்டும்.
* முடிவு திகதி ............ 31/12/1978.
* பரிசுகள்: முதற் பரிசு ரூபா 100/-
  இரண்டாம் பரிசு ரூபா 50/-
  மூன்றும் பரிசு ரூபா 25/-
* கதைப் பிரதியின் உடலுள் எழுத்தாளரின் முகவரியோ பெயரோ குறிப்பிடக் கூடாது, தனியான தாளில் தரப்படவேண்டும்.
* பரிசு பெறும் கதைகளும் போட்டிக்கு வரும் தரமான கதைகளும் தொடர்ந்து சுடரில் பிரசுரிக்கப்படும்.
* ஆக்கங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

இரசிகமணி நினைவுச் சிறுகதைப் போட்டி,<br>
ஆசிரியர் ''சுடர்''<br>
194ஏ, பண்டாரநாயக்க வீதி,<br>
கொழும்பு-12.

சுதந்திரத்தின் முதற்படி எமது சுகங்களைத் துறப்பதாகும்.

பாரதியின் பாடலொன்று இதனைச் சிறப்பாக விளக்கும். அதாவது,

''இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே''

என்று பாடியுள்ளார்.

பாரதிக்குப் பின்வந்த 'காந்தீயக் கவிஞர்'ரான நாமக்கல்-வெ. ராமலிங்கம் பிள்ளையவர்களும் விடுதலை பற்றித் தனது பாடலொன்றில்-

''சுதந்திரம் தருகிற
மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகந் தரும் உணர்ச்சியும்
வேறுண்டோ?
பதந்தரும் பெருமையும்
பணம்தரும் போகமும்
பார்த்தால் அதை விடக்
கீழன்றோ?''

என்று சிறப்பாக வரைந்துள்ளார்.

மாடுகளுக்குப் பதிலாக மனிதனைப் பூட்டி வண்டிலை ஓட்டிய காலமொன்று அமெரிக்காவில் இருந்தது. அந்தக் கொடுமையைக்கண்டு கொதித்தெழுந்து போராடிய 'சனநாயகத் தந்தை' ஆபிரகாம் இலிங்கன் அவர்கள்-

''மற்றவர்களுக்குச் சுதந்திரம் வழங்க விரும்பாதவர்கள், தாங்கள் சுதந்திரத்துடன் வாழத் தகுதியற்றவர்கள். அப்படி அவர்கள் வாழ்ந்தாலும் அந்தச் சுதந்திரம் வெகுகாலம் நிலைக்காது''

என்று அறுதியிட்டுச் சொல்லுகின்றார்.

சுதந்திரம் கேட்டுப் பெறுவதா?

உலகவரலாற்றில் சுதந்திரத்தைக் கேட்டுப் பெற்ற நாடுகள் மிக மிகக் குறைவு.

கண்ணீரும், செந்நீரும் சிந்தி, உயிர்ப்பலிகள் பலவற்றைத் தியாகம் செய்தே ஒவ்வொரு நாடும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளன.

சுதந்திரப் போராட்டத்தில் நாம்காட்டும் முனைப்பே, நமக்கு வெற்றியைக் குவிக்கும் சிறந்த படைக்கலன் ஆகும். இத் தியாக—உத்வேக முனைப்பினைப் பற்றிப் புரட்சியாளன் மாஜினி சொல்கையில்—

''நாம் முழந்தாளிட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும், நின்று கொண்டு இறப்பதே மேல்''

என்று திடமாகச் சொல்லியுள்ளான்.

அடக்குமுறை அரசுகள் என்றும் நிலைத்ததாக வரலாறே இல்லை. அதுபோல, அடிமைப்பட்ட நாடுகளும் என்றும் அடிமைப்பட்டுக் கிடந்ததாகவும் வரலாறு இல்லை.

தமிழினமும், தற்போதைய காலகட்டத்தில் தனக்கென ஒரு நாட்டை அமைக்கத் துணிந்து விட்டது.

அதாவது தனது இழந்த நாட்டை மீட்கத் துணிந்து விட்டது.

முடிவில் வெற்றி தமிழர்க்கே.

ஏனென்றால், உலகத்து அறிஞர்கள் அனைவரினதும் சுதந்திரம் பற்றிய கருத்துக்களெல்லாம், சுதந்திரம் அடையத் துடிக்கும் நாடுகளுக்குச் சாதகமாகவே இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் வாய்மொழி

## ஐப்பசி சுடர் பற்றி ஒரு விமர்சனக் கண்ணோட்டம்

சுடர் ஐப்பசி இதழில் 'செய்தி அலைகளி'ல் தொடங்கி வாசகர் வாய்மொழிவரை வரி வரியாகச் சுவைத்தேன். சுடர் சுடர்தான் என்ற நியாயமான திருப்தி ஏற்படுகிறது.

த. வி. கூ. பற்றிய கசப்பான சில சமீப கால நடத்தைகளை 'ஏன் இந்தக் குழப்பம்?' என்று கேட்டு, இடித்துக்காட்டியிருப்பது சுடரின் சரியான இலட்சியத்தைக்காட்டுகிறது. அரசியல் வாதிகளின் சிந்தனைகள் சில வேளைகளில் என்னென்னவோ காரணங்களுக்காக தடம்புரண்டாலுங்கூட சுடர் சரியான இலட்சியத்தில்தான் செல்லும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

காவலூர் ஜெகநாதனின் 'கருங்காலி' கதை இந்த இதழுக்கு அணி செய்கிறது. 'பொருளாதார ஏற்றத்தாழ்வினால் ஏற்பட்டு விட்ட சொத்துடமை சமுதாயத்தில் இந்த அடிமைத்தனங்கள் தவிர்க்க முடியாதவையே. இந்த இழி நிலையை மாற்றுவதற்கான சிந்தனைகள் இன்று எவ்வளவோ தோன்றி வளர்ந்து விட்டன. இருந்தாலும், முன் சந்ததியின் பிரதிநிதிகளினால் மாற்றிவிட முடியாத நிலையில் ஊறிவிட்ட இந்தநிலை ஓரளவுக்கு இருக்கவே செய்கிறது. இதனைச் சாடுவதிலும், இந்த இழிவைச் சாடி அழிப்பதற்கும் போராட வேண்டிய போராளிகளை உருவாக்குவதிலும் அல்லது உருவாக்குவதற்கான சிந்தனைகளை தூண்டுவதிலும்—இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்கள் பெரிதும் தங்கியிருக்கிறார்கள். இந்த வகையில் கருங்காலி சுட்டிக் காட்டிய 'அந்தோனிகளை'யும் "எங்களைப் போல ஆக்கள் உணர்வு பெற்றால் உன்ர ஐயாவைப் போன்றவர்கள் இப்படித்தான் ஓடவேணும்" என்ற சிந்தனைகளையும் உருவாக்கியதை நாம் பாராட்ட வேண்டும். இந்த சிந்தனைகள் காலத்தின் வளர்ச்சியில் தவிர்க்க முடியாதவையே...

அடுத்து, என்னைக் கவர்ந்தது 'குருவும் சிஷ்யையும்' என்ற உருவகம். அதன்கீழ் சுட்டியிருக்கும் 'அரசியல் உபதேசம் செய்யும் தமிழீழம் காணப்போகும் தலைவர்கள் சிலர் இங்கே குருவின் நிலையில்தான் இருக்கிறார்கள்' என்ற வசனம் தேவையானதே அல்ல. சுடரிடம் நீண்டகால ஈடுபாடுள்ள இலக்கிய ரசிகர்களுக்கு இந்த உருவகத்தின் சூசகம் தெளிவாகியிருக்கும்.

'இரசிகமணியின் அபூர்வ நினைவுகள்' கட்டுரைகள், 'தமிழால் முடியும்' கட்டுரை இரண்டும் சுடர் எமக்கு அளித்த மேலுமிரு தரமான கட்டுரைகள். 'தமிழால் முடியும்' கட்டுரையின் ஆழ்ந்த ஆராய்ச்சிப் புள்ளி விபரங்கள் உள்ளத்திற்கும் அறிவுக்கும் நல்ல தீனிகள்.

'வழக்கொன்று தீர்ப்பாகிறது' கதையில் வீசும் மண் வாசனை—வர்ணனைகளைப்பற்றி சொல்கிறேன் — என்னை மிகவும் கவர்ந்தது. 'உள்ளத்தால் கெடாதவள் உமா' கதையில் இனக்கலவரம் பின்னணியாக வந்து அதற்குப் பெருமை அளிக்கிறது இனக்கலவரம் இடம் பெற்றதைவிட அந்தக் கதையில் வேறெந்த விசேடமும் தெரியவில்லை.

'தாயே உனக்காக' கவிதை அருமை...

துணுக்குகள் மேலும் சுடரை அணி செய்கின்றன. புலவர்மணி மறைந்ததுபற்றி அதிகம் எழுத முன்னர் சுடர் தயாராகி விட்டது போலும். ஒரு சிறுகுறிப்பு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த இதழில் அவர் பற்றிய கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன்.

எஸ். கே. விக்னேஸ்வரன்,
அம்பன், குடத்தனை.

## ஐப்பசி சுடர் 'ஏ வண்'

ஐப்பசி மாத சுடர் மிக நன்றாக இருக்கிறது. அமைப்பும் பிரமாதம். 'பொன்னரி'யின் படங்கள் அழகாக இருக்கின்றன. எந்த வகையிலும் சுடரைக்குறை சொல்ல முடியாது. எல்லா வகையிலும் 'ஏ வண்' தான். பக்கத்துக்குப் பக்கம் இன்னும் அதிகமாக துணுக்குகளைப்போட்டால் நல்லது. மாதம் தவறாது சுடர் வெளிவருவது கண்டு மிக மகிழ்வடைகிறேன். எனது பாராட்டுக்களை மனம் விட்டுத்தெரிவிக்கிறேன்.

—செ. குணரத்தினம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

## பாராட்டுக்கள்

சுடரின் நிரந்தர வாசகர்களில் நானும் ஒருவன். சுடர் ஒவ்வொரு மாதமும் 15ந் திகதியில் எங்கள் கையில் கிடைக்கும் என்ற தங்கள் அறிவிப்பு செயல் வடிவம் பெறுவதையிட்டு பாராட்டுக்கள்.

—பொ. ரவீந்திரன், யோகபுரம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

mws
மில்க்வைற்

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலைபேசி 7233

கிளை:
79, மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி: 36063




## அண்ணா தயாரிப்புக்களே.

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லாக் கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளே.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

# அண்ணா தொழிற்சாலை

இணுவில். டெலிபோன்: 7412

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்படது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org